முல்லைக் கொல்லை

சேத்தூர் கூடத்தின்

கலைஞர் மு. கருணாநிதி

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

வெளியீடு :

K. R. நாராயணன்

திலாலா சந்து : : சென்னை-5.

1954

முதற்பதிப்பு—மே திங்கள் 1954.

(உரிமை பெற்றது)

அச்சிட்டது :

சங்கர் பிரிண்டர்ஸ்,

114, பிராட்வே, சென்னை-1.

மே. கே ருணாநிதியின் உரிமைக்குரல்.

K. R. நாராயணன் வெளியிட்டுக்
கொள்வதற்கு, என் பெருமகிழ்
வெய்துகின்ற "மேய்க்கொல்லி" என்னும்
அங்கத்தை மூட பதிப்பு வெளியிட
கோரின உரிமை கிளர்ந்தெழுகிறேன்.

19/7/54

என் உரை

★

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பம்பரயில் ஆற்றிய சொற்பொழிவையும், மாதவரத்தில்—ஆற்றிய சொற் பொழிவையும் இவை இரண்டையும் ஒன்றுக சேர்த்து **" முல்லைக் கொல்லை "** என்ற தலைப்பில் வெளியிடு கிறேன், ஒவ்வொரு சொற்பொழிவும் திரு. மு. க. அவர்களிடம் திருத்தம் பெற்றது. இதை வெளியிட்டுக் கொள்ள உரிமை அளித்த கலைஞர் மு. க. அவர்களுக் கும் (மு. க. பதிப்பகத்தாருக்கும்) சுருக்கெழுத்து எடுத்து உதவிய முரசொலி சொர்ணம் அவர்களுக்கும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் என்னு டைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

K. R. நாராயணன்

17-7-54

விற்பனை உரிமை

திரவியம் கம்பெனி

132, பிராட்வே

சென்னை

நந்தவனத்திலே

முல்லைக்கொல்லை அத்தை மகள் நம் மேடை இலட்சிய இதழ் கைத்தறி வாங்கலையோ

சேத்தூர் கூட்டம்

மூல்லைக் கொல்லை

அன்புள்ள தலைவர் அவர்களே ! தோழர்களே ! தாய்மார்களே ! மாற்றுக் கட்சிநண்பர்களே ! உங்கள் அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிடத்திலிருந்து உங்களைக் காண வந்திருக்கும் நாங்கள் நால்வரும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் பரம்பரையினரல்ல. ராமன், லட்சுமணன், பரதன், சத்துருக்கனின் பரம்பரையினருமல்ல. தி. மு. க.வின் தூதுவர்களான நாங்கள் பெரியாரின் பூந்தோட்டத்திலே பூத்த மலர்களாகி அண்ணாவால் கட்டப்பட்ட கொள்கை மாலையிலுள்ள நான்கு மலர்கள். நேற்று முதல் உங்களைக் காண பூரிப்படைகிறேன். பெருமகிழ்ச்சிக் கொள்கிறேன். ஆனால் வேதனையும் பிறக்கிறது நண்பர்களே ! முத்துக் கடலும். முல்லைக் கொல்லையும் நிறைந்த நாட்டிலே யிருந்து வாழமுடியாமல் நீங்கள் எல்லாம் விரட்டப்பட்டவர்கள் என எண்ணும்போது விழியிலே நீர் வழியாலிருக்குமா ?.....

தோழர்கள் என். வி. என். அரங்கண்ணல், கண்ண தாசன் முதலியோர்தி. மு. க. கருத்துக்களைபற்றி, திராவிடச் செல்வநாடு பிரியவேண்டிய அவசியம்பற்றி, அரசாங்கத் தாரின்அடக்கு முறை–சூழ்ச்சி இவைகளை ஆதார விளக்கத் தோடு எடுத்துரைத்தார்கள். தி. மு. க. இன்றைய தினம் இந்த அளவுக்கு பெருமையும் பெருங் கூட்டத்தையும் கொண்டிருக்குமா என்ற செய்தியை நானும் என் நண்பர் களும் நம்பவில்லை. எங்களுக்குமுன் வந்துபோன தோழர் நெடுஞ்செழியன் சொல்லக் கேள்விப்பட்டாலும் இந்த அளவுக்கு தி. மு. க. அமோக ஆதரவைப் பெற்றிருக்கும் என்பதை நம்பவில்லை. உள்ளபடியே சொல்கிறேன். நான் தோற்று விட்டேன். செயல் வீரர்கள் அமைத்த கொள்கைக் கோட்டையிலே இருநூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ப. தி. மு. க. வளர்கிறது என்ற இன்பத்தேன் பாய்கின்ற சொல்லைக்கேட்க தாயகத் திலே யிருந்து வந்துள்ள நாங்கள் பெருமிதமும், களிப்பும் கொள்கிறோம்.

நமது திராவிடத்திற்கு வந்து போகின்ற வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், குறிப்பாக நேரு போன்றவர்களின் சுற்றுப்பிரயாணம் திராவிடத்திலே, பல பகுதிகளிலே, திசைகளிலே நடந்து வந்ததை, நேற்று தோழர் என். வி. நடராசன் சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள். பத்திரிகை மூலமாகவும் அறிந்திருப்பீர்கள். காங்கிரஸ் கோட்டை திராவிடத்திலே கல கலக்கும் நேரத்திலெல்லாம், கல்ல றைக்குஅனுப்ப திராவிடம்முயற்சிக்கும் பொழுதெல்லாம், வடநாட்டு தூதுவர்கள் பறந்துவந்து, அருமை ஆச்சாரி யாரை ஒன்றுக அணைத்து பட்டாளத்துடன் பவனி வரு ர்கள். மக்களின் அறிவை மழுங்க வைக்க காந்திப் த்தை, கொள்கையைக் காட்டி, முழுக்கம் செய்வதும்,

ராயலசீமை கஞ்சித்தொட்டியை ருசிபார்த்து, ஒருசொட்டு கண்ணீர் விடுவதும், திராவிடத்திலே கொழுந்து விட்டெரிகின்ற தி. மு, க, வின் சக்தியை ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சியேயன்றி வேறெதுவுமில்லை.

பாட்டிமார்களின் ஒப்பாரிக்கதை ஒன்று ஞாபகம் வருகிறது. சாவு ஏற்பட்ட அடுத்த வீட்டிற்கு அழப்போன இருவரில் ஒருத்தி, அந்த வீட்டு தோட்டத்திலே தொங்கிக்கிடந்த பாவக்காயைப் பார்த்தாள். அழுகையோடு அழுகையாக "பந்தலிலே பாவக்காய்" பந்தலிலே பாவக்காய்" என்று அழுதாளாம். கூட வந்தவள் அழுகையோடு அழுகையாக அது போகையிலே பார்த்துக்கலாம், என்று அழுதாளாம். இதைக்கேட்ட சாவு வீட்டுக்காரி "அதை விதைக்கல்லவோ விட்டிருக்கு, அதை விதைக்கல்லவோ விட்டிருக்கு" என்று அழுதாளாம். அதுபோலத்தான் எதிர் வீட்டு நேரு, "திராவிடத்துப் பந்தலிலே பாவக்காய், பந்தலிலே பாவக்காய், தொங்குதடி அக்காடி" என்று ஒப்பாரி வைக்க, பக்கத்துவீட்டுக்காரி ஆச்சாரி "அது போவையிலே பார்த்துக்கலாம். போவையிலே பார்த்துக்கலாம்" என்று அழ, சொந்த வீட்டுக்காரியான நம் அண்ணு "திராவிட நாடு விதைக்கல்லவோ விட்டிருக்கு, விதைக்கல்லவோ விட்டிருக்கு" என்று பதில் சொல்லுவதுமான நிலைதான் இன்றைய திராவிடத்தில்.

திராவிடப்பெருங்குடிமக்களே! இந்தியாவின் பிரதமர், ஆசியாவின் சோதி, காந்தியாரின் வாரிசு. முடிசூடா மன்னர்—இல்வளவு பெரிய மனிதர், நீங்களெல்லாம் இங்கிருக்கும்பொழுது, உங்கள் தாய்மாரை, தந்தைமாரை, தம்பிமாரை, தமக்கையரை, அண்ணன்மாரை, ஏகாதிபத்திய வெறிபிடித்து, ஆத்திரத்தில், அவசரத்தில், நான்சென்ஸ

என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். கடந்த ஆகஸ்டு 1-ல் தமிழ் காத்த வீரர்களைத் தான் 'நான்சென்ஸ்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். வடநாட்டு இந்தி வேசியின் முகத்தில்பூசப்பட்ட தாரானது உண்மையிலே அந்த இந்தி எழுத்துக்களின் மேல் பூசப்பட்ட தாரல்ல. வட நாட்டு ஏகாதிபத்திய வெறியர்களின் முகத்திலே பூசப்பட்ட தாராகும். நான்சென்ஸ்என்ற சொல்லைக்கேட்கும் நாங்கள் ஆத்திரப்படுவதற்கு பதிலாக மகிழ்ச்சியடைகிறோம். நான் சென்ஸ்என்ற வார்த்தைதான் திராவிடத்தைபிரிக்கும் வாள். திராவிடநாடு பிரிக்கப்பட, கிழிக்கப்பட உதவும் சட்டி என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சொல்லட்டும் முட்டாள், அறிவிலி, அடிமை, ஆட்டுக் கூட்டம், மாட்டு மந்தை என்று கூட சொல்லட்டும், தாக்கத் தாக்கத்தான் உரிமை வேட்கை வளரும் தோழர்களே ! நீங்களும் நாங்களும் பிறந்து வளர்ந்த நம் திராவிட பூமியிலேதான் உங்கள் உடல் கலக்கப் போகிறது. அந்த திராவிட மண்ணிலே—சிங்கத்தின் குகையிலே சிறு நரிகள் நம்மைப் பார்த்துச் சிரித்தால் ஆத்திரப்படமாட்டோமா? எங்கிருந்தோவந்த இந்தி வேசிக்கு உச்சாணிக் கொம்பா? இந்நாட்டு சொந்த மொழிக்கு 3-வது இடமா என்று போர்க்காலம்பூண்ட தலைவர்களை–தொண்டர்களை, நான்சென்ஸ் என்றுசொல்லும் நேரு. அதை எழுதியது எத்தகைய நான் சென்ஸ்என்று உணராது பேசுகிறார். 'நேருவே' எங்கள் மேருவே!பாருமே இந்த தாருவே' என்று சொன்ன இந்திச் சிறுக்கியைக்கண்டு நேரு நான்சென்ஸ் என்று கத்திவிட்டு வந்திருக்கிறார். ஆம், தோழர்களே! இப்படித்தான் தன் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வந்தார் உங்களின் அருகாமையிலே குடியிருக்கும் அகில இந்தியப் பிரதமர் நேரு.

இந்தச் செய்திகளை திராவிடத்திலிருந்து வந்திருக்கின்ற நாங்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோ மென்பதால் தான் சொல்லுகிறேன். இன்று நாட்டிலே நம்மைப்பற்றி நாஸ்தீகக் கூட்டம் என்ற தவறுன, புரியாத கருத்து மக்களிடையே பரப்பப்பட்டு வருகிறது. உண்மையிலேயே இந்த நாட்டிலே நாஸ்தீகர்கள் யார்? பகவான் பெயரைச் சொல்லி பலகோடி மக்களை, சமுதாயத்தை படுகுழியில் தள்ளிய—தள்ளிவரும் பாதகர்கள் நாஸ்தீகர்களா? அல்லது மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பாடுபட்டு வரும் நாங்கள் நாஸ்தீகர்களா? எந்தக் கடவுளை எத்தன்மையிலே நீ வணங்கச் சொல்லுகிறாய்? பாடு பட்டு உழைக்கும் பாட்டாளித் தோழனின் மனதிலே இருக்கிறான் என்றுசொல்லு அவன் உழைப்பைக் கடவுள் என்று சொல்லு. அவன் சக்தியைக் கடவுள் என்று சொல்லு, அதிலே அர்த்தம் உண்டு. அதை விட்டு விட்டு நீ சொல்லத்தகாததை, இல்லாததை கடவுள் என்றுல் எப்படி நம்புவது? எது கடவுள்? யார் கடவுள் என்பவற்றிற்கு விளக்கமாக நமது பழங்கால சித்தர்களில் ஒருவர் நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றிவந்து மொண மொண யென்று சொல்லு மந்திரமேதடா? என்றும் இது போன்ற கேள்விகளை இந்த ஆஸ்திக சிகாமணிகளைப்பற்றி கேட்டிருக்கின்றனர். நாமும் தான் என்ன சொல்லி வருகிறோம். வேலைக்காரி என்ற படத்திலே அண்ணு சொல்லுவது போல 'ஒன்றே குலமும் ஒருவனே தேவ'னும் என்ற முறையில் தானே சீர்திருத்தம் காணக் கேட்கிறோம். அதை பார்த்த பிறகுமா நாஸ்திகர்கள் என்று புலம்புகிறாய்? எங்கள் ஆண்டவன் அறிவு அன்பு வடிவமென்று சொல்லிக்கொள்கிறாயே? உண்மையிலே உன் ஆண்டவர்கள் அத்தனை பேரும் இதற்கு நேர்மாறுக அல்லவா காட்சி

யளிக்கிறார்கள் ? கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் வணங்க அவர்களுக்கு ஒரு ஏசுநாதர். பல லட்சக்கணக் கான முஸ்லீம் மக்களுக்கு ஒரு நபி. நீ சக்கிலியன், சண் டாளன், பள்ளன், பறையன் எனப் பிரித்துவைத்து முப் பத்து முக்கோடி தேவர்களையும், பல்லாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்கு பாலகர்கள், காளி, காட் டேரிகள், எக்ஸெட்ரா எக்ஸெட்ரா உண்டுபண்ணி வைத் திருக்கிறுயே ? இவ்வளவு பெரிய் கடவுள் கூட்டம் உனக்குத் தேவைதானு ? 22 கோடி இந்துக்களுக்கு 33 கோடி கடவுள் கூட்டத்தை உண்டு பண்ணி ஒரு ஆளுக்கு ஒன்னரை வீதம் ஏற்படுத்தி இந்த நாட்டைப் பாழாக்கியிருக்கிறுயே? இதுவும் போதாதென்று கிருஸ்தவ மதத்திடமும், இஸ்லாமிய மதத்திடமும் அல்லவா கடவுள் பிச்சைக் கேட்டுக்கொண்டு அலைகிறுய் ? எதை நீ விட்டு விட்டாய் ? மைல் கற்களைத் தவிர மற்றதெல்லாம் கடவு ளென்று அல்லவா எழுதி வைத்திருக்கிறுய். மேல்நாட்டுக் காரனும் உன்னைப்போலத்தான் கடவுளைக் கும்பிடுகிறுன். எப்படி வணங்குகிறுன். கருடன் ஆகாயத்திலே பறப்ப தைப்பார்த்து, அதைப்பிடித்து, அதன் இறக்கைகளை ஆராய்ந்து, பருந்தின் பருமனை நிறுத்து, காற்று புக முடியாத சூன்யப் பிரதேசமாக அமைந்திருக்கும் அதன் இறக்கை எலும்புகளைப்பார்த்து இன்று பறக்க கற்றுக் கொண்டான். பருந்து பரக்கிறதைப் பார்த்து 'கிருஷ்ணு ! கிருஷ்ணு !' என்று கன்னத்திலடித்துக்கொள்வதை தவிர நீ எதைக் கற்றுய்? கடல் நீரிலே மீனைப்பார்த்தான், எப்படி நீரை கிழித்துச் செல்லுகிறதென சிந்தித்து, கப்பலைக் கட்டி னுன், சப்மெரினைக் கண்டு பிடித்தான். நீ மச்சக்காவடி தூக்கி ஆடுவதையும், மீனைப் பிடித்து கரியாக்கி தின்பதை யும் தவிர எதைக் கண்டாய் ? பெரிய பெரிய மலைகளைப் பார்த்து, அவற்றைக் குடைந்து, ரயில் பாதைகளை, ரோடு

களை அமைத்தான் அவன். நீ எங்கள் கோபாலகிருஷ்ணன் மலையை குடையாகப் பிடித்தான் என்று சொல்லுவதை யும், அனுமான் சஞ்சீவி மலையை தூக்கி கையில் வைத்து பறந்தான் என்று சொல்லுவதையும் தவிர எதைக்கற்றாய்? அதுமட்டுமா? எந்தக் கடவுளை நீ ஒழுங்காக, மானமரி யாதையுடன் வைத்திருக்கிறாய்? பிள்ளையார் பிறந்த கதை தெரியாதா? ஒருநாள் சூளிக்கச் சென்ற பார்வதி தன் அழுக்கை உருண்டையாக்கி, பிள்ளையாரைக் காவலாக வைக்க, வெளியேயிருந்து வந்த பரமசிவன் உள்ளே நுழைய, பார்வதியின் சிருஷ்டியான அழுக்குப் பிள்ளை யார் பரமசிவனைத்தடுக்க, உடனே 'நீ யாரடா என் மனைவி இருக்கும் அறைக்கு நான் போவதைத்தடுப்பவன்?' என்று ஆத்திரமடைந்து அதன் தலையை அறுத்தெரிந்து உள்ளே சென்றார் என 1952-லும் சொல்லுகிறாயே வெட்கமில்லை! இதைக் கண்டிப்பது நாஸ்திகமா? அத்தர்கம்மென்ன வீச, வாசனைத் தைலங்கள் மேனியை மினுமினுக்க, பசியே இல்லாத, அழுக்குப்படிய காரணமே இல்லாததேவலோகத் திலேயிருக்கும் பார்வதி அவ்வளவு பெரிய பிள்ளையாரை தன் அழுக்கிலே உண்டாக்கினாள் என்றாள் அவள் எத்தனை நாளாக குளிப்பின்றி இருந்திருக்க வேண்டும். பார்வதியின் அழுக்கிலே செய்த பிள்ளையார் சென்னையிலே மல்யுத்தம் செய்து வரும் கிங்காங் பயில்வானைக்கூட தோற்கடிக்கும் பருமனிலே அல்லவா இருக்கிறார். அத்தகைய பார்வதி, பரமசிவனுக்கு, நீ படைக்கும் படையலிலே 'லக்ஸ் டாய்லட்' சோப்பு வைத்து படைக்க வேண்டாமா?

நீ எவ்வளவு வஞ்சகம் செய்து வருகிறாய்?

இந்த நிலையிலே நமது ஆண்டவன்கள்! மேல் நாட்டு கடவுள்களைப்பார். கொள்கைக்காக உயிர்விட்ட ஏசுகிறிஸ்

துவை, இருகையிலும் சிலுவையில் வைத்ததுபோல் ஆணி யடித்திருக்க, தலையைத்தாழ்த்தி தியாகச் சின்னமாக காட்சி யளிக்கும் படத்தைப்பார்க்கிறோம். மகம்மது நபி கல்லால் அடிக்கப்பட்டு துரத்தப்படுவதையும், கொள்கைக்கு ரத்தம் சிந்தி துன்புறும் படத்தையும் காணுகிறோம், மகாராஜா வாரிசு, மஞ்சம் கொஞ்சல் அத்தனையையும் வெறுத்து, வெளியேறி. புத்தம் கண்டு, புன்முறுவலேயேகொள்கையா ஆக்கொண்ட புத்தன் படத்தையும் பார்க்கிறோம். கொள் கைக்காக கழுவிலேற்றப்பட்ட நூற்றுக்கணக்கான சமணர்களின் படத்தையும் பார்க்கிறோம். ஆனல் நாமும் தான் பார்க்கிறோம். கோதையர் குளத்தில் நீராட கோபால கிருஷ்ணன் சேலையை எடுத்துச் சென்று மரத்திலே ஏறி புன்னகவராளி பாடும் காட்சியை ! இதுவா ஆண்ட் வனின் தன்மையாக் இருக்கவேண்டும்? பளிங்கு போல பக்கத்திலே பார்வதியையும் வைத்துக்கொண்டு அதுவும் போதாதென்று தாருகாவனத்து பத்தினிகளைக் கற்பழித்த பரமசிவன் கதையையும் நாம் பார்க்கிறோம்.

சூதாடி, நாடு முதல் மனைவிவரை இழந்த தர்மன் கடவுள் ஆகிவிட்டான், சூதாடும் கூட்டத்திலே ஒருவன் நான் தர்மன் பக்தன் என்று சொன்னல் இன்றுள்ள போலீஸ் சும்மா விட்டுவிடுமா ? சிரிப்பாகச் சிரிக்கிறதே உன் கடவுள்கதைகள்.

வடஇந்திய நடிகை பீனராய், தன் கணவருடன் சமீ பத்தில் அமெரிக்காவிற்கு சென்றபொழுது நடந்த நிகழ்ச்சி யைக் குறிப்பிட விரும்புகிறேன். பீனராய் தமது கணவரை அமெரிக்க நடிகைக்கு அறிமுகப்படுத்தினராம். உடனே அம்மாது 'மற்ற நான்கு கணவர்கள் எங்கே?' என்று கேட் டாளாம். அதாவது 'பாரதத்தில் துரௌபதிக்கு ஐந்து பேர்

கணவர்' என்பதைப் படித்திருக்கிறாள் அந்த அமெரிக்க நடிகை. பாரதப்பெருமை நம் தாய்மார்களை பற்றி பிற நாட்டினர் தவறுகக்கருதும் நிலையை ஏற்படுத்துகிறது. எவ் வளவு பெரிய அவமானம் நமது நாட்டுப் பெண்டிர்க்கு, நாட்டு கலாசாரத்திற்கு, இருக்கலாமா இந்த இருபதாம் நூற் றாண்டிலும்? மார் தட்டுகிறாயே மகாபாரதம், ராமாயணம் ரஷ்யாவிலே மொழி பெயர்க்கப்படுகிறதென்று. மொழி பெயர்த்த பின்னல்லவா தெரியப்போகிறது உன் வண்ட வாளங்கள்!

சிலப்பதிகாரத்தை, சங்க இலக்கியத்தை, புறத்தை, அகத்தை, கலிங்கத்துப் பரணியை மொழி பெயர்க்கிறார் கள் என்று சொல்லு; அர்த்தம் உண்டு, யோக்கியதை உண்டு—தகுதியுண்டு. அதைவிட்டு ராமாயணம், மகா பாரதம் மொழிபெயர்க்கப்படுகிறதென்று சொல்லுகிறாயே; எத்தகைய இழிவு நாட்டிற்கு! மூட்டாள்தனமான புராணக் கூளங்கள், வேதாந்தம் இவைகளையன்றி நீ எதை மொழி பெயர்க்க வைத்திருக்கிறாய்?

அந்தக் காலத்தில் இவைகளை யெல்லால் நம்பினார்கள் பெரியவர்கள். வாலிபர்கள்; இந்தக் காலத்திலே கருப்புச் சட்டைக் காரர்கள். அண்ணாத்துரைக் கட்சிக்காரர்கள் இப்படி கடவுளைத் திட்டப்போய்தான் நாட்டிலே நாஸ் திகம் பெருத்து மழையே இல்லாது போய் விட்டதென்று வெட்கமில்லாமல் உளறுகிறாயே, சொல்லுகிறாயே கொஞ்சமும் அறிவின்றி. அந்தக் காலத்திலே 12 வருட காலம் மழையின்றி பஞ்சத்தால் கஷ்டப்பட்ட நல்ல தங்காள் கதையை எழுதி வைத்துக் கொண்டு இப்படி கூப்பாடு போடுகிறாயே!

அந்தக் காலத்தை இந்தக் காலத்திற்கு ஒப்பிடுகிறுயே எந்த விதத்தில்? எந்தத் தன்மையில்? ஆகாய விமானத்தில் ஏறுகிறுய். பக்கத்திலே பறக்கும் கருடனைக் கண்டு கன்னத்தில் தட்டுகிறுய்! ரிஸ்ட் வாட்ச் காட்டுகிறுய், ராகு காலம் பார்க்கிறுய்! விஞ்ஞானத்தை வைதிகத்திற்கு அடிமைப் படுத்துகிறுய்! இதுவா நேர்மை, நல்லறிவு? இதை எடுத்துச் சொல்லும் நாங்கள் நாஸ்திக கூட்டமாம் தோழர்களே!

தி. மு. கழகம் இன்று ஏளனங்கள் பலவற்றையும் இடுக்கண்கள் அத்தனையும் தாங்கித்தான் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்று வருகிறது. வீரர்கள் தாலமுத்து நடராஜனை, ஆசிரியர் வேலாயுதத்தை, மஜீதை, பாண்டியனை ஆதிக்க வெறி அநியாய முறையில் தன் கோரவாயல் ருசிபார்த்த பிறகும் தி. மு. க. வளர்கிறது. துப்பாக்கிக் குண்டுகள், தோட்டாக்கள், பீரங்கிகள், போலீஸ், பட்டாளங்கள் நசுக்கியும் வளர்கிறது திராவிட முன்னேற்றக் கழகம் வடநாட்டு ஏகாதிபத்தியம் தென்னுட்டை எந்தவகையில் சுரண்டி வருகிறது என்பதையும், தென்னுட்டார் வடநாட்டை எந்த வகையில் சுரண்டி வந்த பிறகுதான் நான் நேரிலே காண முடிந்தது. தென்னுட்டவராகிய நம்மவர்கள் இறந்து போன மரட்டு ஆட்டுத் தோலை இங்கு சுரண்டி பக்குவப் படுத்தி வியாபாரிகளிடம் வேலை செய்கிறார்கள் அன்றுடக் கூலிக்கு. ஆனல் தென்னுட்டிலே வடநாட்டு மார்வாடி, பனியாக் கும்பல்கள் தென்னுட்டு மக்களின் தோலை உயிருடனே சுரண்டிக் கொண்டிருக்கிறது என்ற நெஞ்சு வெடிக்கும் நிகழ்ச்சியைத்தான் காண முடிகிறது.

தஞ்சையா, நஞ்சையா என்ற செல்வம் கொழிக்கும் தெரு வீதிகளிலே பிள்ளை வியாபாரம் ஆச்சாரியாரின் ஆட்சியிலே! வடநாட்டு பம்பாயிலே உள்ள பிச்சைக்காரரில் 100-க்கு 95 பேர் தென்னாட்டு பிச்சைக்காரர்கள் இவர்களெல்லாம் பரம்பரை பிச்சைக்காரர்களா - இல்லை யில்லை தோழர்களே சுயராஜ்ய ஆட்சிக்கு முன்பு வரை நல்வாழ்வு நடத்தி வந்த தமிழன் இன்று வடநாட்டு ஆதிக்க சுரண்டலால் தாயகத்தில் பிழைக்க வழியின்றி வளம் கொழிக்கும் வடநாட்டிலே பிச்சைக்காரர்களாய் பஞ்சைகளாய் வாடுகின்றனர், இதைப் பார்க்கும்போது எங்கள் உள்ளம் வேதனையடையாதா? நெஞ்சம் வெடிக்கும் செய்தி இது.

இத்தகைய அவலநிலை ஒழிந்து திராவிட கூட்டரசு மலரத்தான் நம் தி. மு. கழகம் பணியாற்றி வருகிறது. திராவிடம் பிரிவதென்றால் கத்தியைக் காட்டி, வாளைக் காட்டி, இரத்தத்தை சிந்தும் அளவிற்கு அல்ல, அமைதியான முறையிலே. அறிவு முறையிலே, பூகோள, இன வரலாற்று அடிப்படையிலே, மாண்ட நம் வல்லரசை நினைவுறுத்தி மீண்டும் பெற கேட்கிறோம். பாகிஸ்தானுக்கு ஒரு ஜின்னா கிடைத்ததைப்போல, திராவிடத்திற்கு நம் அண்ணா. அத்தகைய தலைமையின் கீழ் போராட ஆயிரக் கணக்கில் அணிவகுத்து நில்லுங்கள். திராவிடக் குடியரசு மலரப் போகும் நாளிலே, பம்பாயிலுள்ள திராவிடத் தனியரசுக் கொடியை யேற்ற, சிங்கப்பூர் தோழர்கள் அதை பறக்கவிட, ஆப்பிரிக்கா தோழர்கள் பண்ணிசைக்க இலங்கைத் தோழர்கள் வீர வணக்கமிடும் காட்சியை நாம் காணவேண்டும்.

அத்தகைய விடுதலைக் கிளர்ச்சிக்கு பம்பாய் தோழர்களாகிய நீங்கள் கட்சி வேறுபாடின்றி, சொந்த மண் மாற்

ருனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்ற உணர்ச்சி யுடன் இலட்சக் கணக்கில் திராவிடம் பெற வீரைவில் குமுறி எழும்போகும் திராவிடப் போராட்டத்தில் குதிக்க தயாராகி வருக,வருக, என வேண்டிக் கொள்வதுடன் உங் களுக்கு எனது வாழ்த்துரையையும் கூறி முடித்துக் கொள் கிறேன்.

அத்தை மகள்

அன்புள்ள தலைவரவர்களே! தோழர்களே! பெரியோர்களே ! தாய்மார்களே !

மாதவரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இம் மாபெரும் பொதுக்கூட்டத்தில் நானும் கலந்து கொள்ள நேர்ந்த வாய்ப்புக்கும், அந்த நல்வாய்ப்பை நல்கிய நண்பர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் தென்னரசு நேரு நம்மை யெல்லாம் பைத்தியக்காரர்கள் என்று பேசியது குறித்து நான் என்ன பதில் சொல்லப் போகிறேன் என் பதை அறியத் துடிப்பதாகக் குறிப்பிட்டார் நேரு நம்மை பைத்தியக்காரர்கள் என்று துணிந்துதான் சொன்னார். உண்மை ! ஆனால் நான் என்ன பதில் சொல்லப் போகி றேன் ? நீங்களெல்லாம் கண்டீர்கள் சற்றுமுன் பந்தலிலே தொங்கிக் கொண்டிருந்த பெட்ரோமாக்ஸ் விளக்கொன்று

திடீரென்று அளவுக்கு அதிகமாக ஒளிவிடத் தொடங்கியதை. பந்தலேயே கொளுத்திவிடுமோ என்ற பயத்தையும் பதை பதைப்பையும் உண்டாக்கிற்று அத்தீபம். ஆனல், சற்று நேரத்தில் அது ஒளிகுன்றி, இதோதொங்கிக் கொண்டிருப்பதைபும் காண்கிறீர்கள், இந்த ஜோதியைப் போலத் தான் ஆசிய ஜோதியும் இன்று ஒளிவிடுகிறது! இதைத் தவிர சுருக்கமாக—சுவையாக—கண்ணியமாக— வேறு என்ன பதில் சொல்லுவதென்று என்க்கே புரியவில்லை.

நேரு இப்போதெல்லாம் அடிக்கடி திராவிடத்திலே திக்விஜயம் செய்கிறூர். அப்படி வரும் ஒவ்வொரு முறையிலும், ஒவ்வொரு வகையில் நம்மை ஏசிப்போகிறூர்! ஏன்? முன்பெல்லாம் தென்னகத்தையே நினைத்துப் பார்க்காத நேரு—திராவிடத்தையே திரும்பிப் பார்க்க நினைக்காத் நேரு - இன்று அடிக்கடி பவனி வரத் தொடங்கியிருப்பதின் காரணம்தான் என்ன?

தென்னகத்திலே இயற்கை அன்னே புயல் ரூபத்திலே கோர நர்த்தனம் ஆடிய நேரத்திலே வந்தாரில்லை! தஞ்சை தரணியிலே, திருச்சி மாவட்டத்திலே மிக மிக வேதனே கலந்த நிகழ்ச்சிகள் நடை பெற்ற வேளையிலே ஆயிரக் கணக்காளோர் பிச்சை எடுக்கும் பரிதாபநிலை பரவியசமயத்திலே - மற்றும் வீடிழந்தும், மாடு வண்டி இழந்தும், வேலை இழந்தும், ஏன் லட்சக் கணக்கான ரூபாய்களை இழந்தும் அநேகர் தடுமாறித் தத்தளித்த நேரத்திலே வந்தாரில்லை!

ஆனல் வந்தார், ஒரே ஒரு பகுதிக்கு. செழிப்பான வளமை குன்ருத உலகத்தின் அழகு பூமிகளிலே ஒன்ருன திருவாங்கூர் பகுதிக்கு வந்தார்! கேரளகீதம் கேட்டார்!

திருப்தி கொண்டார்! திரும்பிச் சென்றார்! இன்னல் நிறைந்திருந்த இடத்தை மறந்து இயற்கை அழகை ரசித்துச் சென்றார்!

அப்படிப்பட்ட நேரு இப்போது மட்டும் அடிக்கடி "திக் விஜயம்" செய்வானேன்? அதிலே அடங்கியிருக்கும் அடிப்படைக் காரணங்கள்தான் என்ன? கடுமையான கேள்வியல்ல, புரியாத புதிருமல்ல! திராவிட முன்னேற்றக் கழகம்தான் நேருவைத் திரும்பிப் பார்க்க செய்திருக்கிறது என்பதைத்தவிர அதற்கு வேறென்னபதில் இருக்க முடியும்?

திராவிடம் வேதனைக் காடாக அழுகுரல் பூமியாக-வறுமைப் புயலிலே சிக்கித் தவித்த நேரத்திலே காண முடியவில்லை நேருவை. ஆனால் இன்றோ திடீரென திடும் திடுமென விஜயம் செய்கிறார்! பார்க்கிறோம்! அதற்கு நல்லதொரு காரணம் இருக்கத்தானே வேண்டும்?

தாயகத்தை மீட்கும் பெரும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். திராவிடத்தாயின் அடிமைத்தளைகளை உடைத்தெறியும் முயற்சியில் குதித்து விட்டோம்! அந்த நமது லட்சியப் பிடிப்பை - வாழ்வுப் பிரச்சினையை அழித்தொழிக்க வேண்டும் பொசுக்கித் தள்ளவேண்டும் என்பதற்காகவே அலகாபாத் வீரர் - ஆசிய ஜோதி அடிக்கடி வருகிறார். அவர் காரியமாற்றும் நேரத்திலும் அபுல்கலாம் ஆஸாத்துடன் கல்வி விஷயமாக உரையாடல் நடத்தும் நேரத்திலும், எதிர் கட்சித் தாண்டனுடன் வாதம் புரியும் நேரத்திலும் குடும்பத்தோடு குலாவி மகிழும் நேரத்திலும் "அமெரிக்க ராணுவ உதவி குறித்து பாகிஸ்தான் என்ன சொல்லுகிறது?" என்ற அரசியல் பிரச்னையில் ஆழ்ந்திருக்

கும் நேரத்திலும் - "அமெரிக்காவின் கண்ணோட்டம் என்ன? ரஷ்யாவின் கருத்தோட்டம் என்ன?" என்ற நினைவோட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நேரத்திலும் - இன்னும் நேரு படிக்கும் போதும், படுக்கும் போதும் உண்ணும் போதும், உலாவும் போதும் அவரது நினைவாக, கனவாக அவர் முன்னே நிறுத்தப்பட்டு விட்டது திராவிட உணர்ச்சி! நமது எழுச்சி! ஆகவேதான் அடிக்கடி வருகிறார்; நம்மைப் பற்றிப் பேசுகிறார்!

முன்பெல்லாம் தென்னாடு என்றழைக்கவே-திராவிடம் என்று சொல்லவே-திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிடவே பயந்திருந்தார் நேரு, எங்கே நமக்கு விளம்பரம் கிடைத்து விடுமோ என்ற வீணன எண்ணத்தால். ஆனால் இன்றோ செல்லுமிடமெல்லாம் சிறிப்பாய்கிறார்— சிந்தை தடுமாறுகிறார்—செல்லாத சொற்களை வீசுகிறார்— தென்னாட்டிலே பிரிவினை உணர்ச்சி முழுரூபம் பெற்று விட்டதைக் கண்டு! அந்த உரிமைக் கிளர்ச்சி—விடுதலைப் போர் எங்கேபோய் நிற்குமோ என்று கவனிக்கிறார். ஆனால் நாமோ திராவிட முன்னேற்ற கழகத்தின் லட்சியத்தைக் காப்பாற்ற, அண்ணாவின் சுட்டுவிரல் அசையுமா—எங்கே, ஒரு கண்ஜாடை காட்டமாட்டாரா—"தம்பிகளே, புறப்படுங்கள்!" என்று கட்டளை இடமாட்டாரா என்று காத்துக் கொண்டிருக்கிறோம்.

எனக்கு முன்பு பேசிய மாணவத் தோழர் ஒருவர் நான் மாணவர்களைப் பற்றி அதிகம் பேசவேண்டும் என்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களிடம் மட்டுமல்ல; திராவிடப் பெருங்குடி மக்களிடம், வீரத் தாய்மார்களிடம், பாடு படும் பாட்டாளிகளிடம் நெருங்கியத் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆகவே

உணர்ச்சியோடும் உரிமையோடும், உறுதி நிறைந்த பண் போடும் "இலட்சியத்தை ஈடேற்றியே தீருவோம்" என்ற எதிர்கால இன்ப முடிவிலே நடைபோட்டு வளருகிறது.

பெரியோர்களே ! திராவிட முன்னேற்றக் கழகம் உங்களைப் பார்த்து வேண்டுவதெல்லாம் உங்களது பழங் கால சரித்திரத்தை சற்றுப் புரட்டிப் பார்க்க வேண்டு மென்பதுதான் ! நீங்கள் பிறந்த நேரத்தில் வெள்ளையன் நம் இன்பபூமியை ஆண்டு கொண்டிருந்தான். ஆண் டாண்டு காலமாக அடிமையாகவே வாழ்ந்து வந்தீர்கள். வேண்டாத வேற்று நாட்டானின் ஆட்சியிலே அல்லல் பட்டுக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் மட்டுமல்ல; உங்க ளுக்கும் முந்தைய—உங்களைப் பெற்றெடுத்தவர்கள் ஆரிய மாயையிடம் கட்டுண்டு கிடந்தார்கள். ஆனால் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அவர்களுக்கு முந்தைய திராவிடர்கள் எப்படி வாழ்ந்தார்கள் ? சேரனும், சோழனும், பாண்டியனும் ஆண்ட திராவிடத்திலே—சுதந் திரத் திருவிடத்திலே உரிமையுடன் வாழ்ந்திருந்தார்கள். ஆனால், அவர்களது பரம்பரையிலே வந்த நாமோ இன்று வாழும் நிலை என்ன? அடிமைகளாக—தொழும்பர்களாக-பொட்டுப் பூச்சிகளாக உலவுகிறோம். ஏன் இந்த நிலை ? எவனெவனோ வருகிறான் — ஏதேதோ பேசுகிறான்— அடக்குமுறைகளையும் வீசுகிறான்—ஏன் இந்த இழி நிலை ?

பெரியோர்களே ! சாகப்போகும் வயது உங்க ளுடையது. வாலிபப் பருவத்தை கடந்துவிட்ட வயோதிக வயது ! மகனுக்குத் திருமணம் முடித்து—அவனது சுக வாழ்வு கண்டு—சிங்காரப் பேரனையும் தொட்டுப் பார்த்து விட்டீர்கள் ! இன்னும் அப்பேரனுக்கும் மணம் செய்து பார்க்கும் பாக்கியம் பெற்ற சிலரும் உங்களிடையே

இருக்கலாம். இனி மண் ஒன்றுதான் உங்களுக்குச் சொந்தம்.

இன்னும் ஐந்தாறு ஆண்டுகள்தான்—அதிகமாகப் போனால் பத்துப், பதினைந்து ஆண்டுகள்தான் நீங்கள் வாழ முடியும். அந்த குறுகிய வாழ்நாளில் நீங்கள் செய்யப் போகும் தொண்டு என்ன? அடிமை நாட்டிலே பிறந் தீர்கள்—சுதந்திர நாட்டிலே சாகக் கூடாதா? உங்கள் சவம் புதைக்கப்படும் மண் புனித மண்ணாக—சுதந்திர மண்ணாக இருக்கக் கூடாதா? இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களைப் பார்த்து, அனுபவத்தின் ரேகைகள் அடர்ந்து கிடக்கும் உங்கள் முகத்தைப் பார்த்துக் கேட்கிறது!

தாய்மார்களே! வேகத்தோடு விடுதலைப் போரில் குதித்துவிட்ட போதிலும், உங்களை திராவிட முன்னேற்றக் கழகம் மறந்துவிடவில்லை. போர் என்றதும் புன்னகை காட்டி, களத்திற்கு காளைச் செல்வங்களை லட்சோபலட்சமாக அனுப்பிவைத்த வீராங் கனைகளின் மரபிலே வந்த உங்களை மறக்கலாமா? மறக் கத்தான் இயலுமா?

முதல் நாள் போரிலே தகப்பன்—மறுநாள் கட்டிய கணவன் – பின் உடன்பிறந்த ஒரே சகோதரன் இப்படி யாக குடும்பத்தினர்கள் குருதி மழையிலே அமிழ்ந்து விட்டார்கள். எஞ்சி நிற்பவனே ஒரே செல்வத் திருமகன்- பனிரெண்டு வயதுப் பாலகன்தான்—குடும்பத்தின் ஆண் மகனாக! அன்றும் போர்களத்திலிருந்து முரசொலி கேட் கிறது! தடுமாறவில்லைத் தாயின் மனம். குடும்பத்திற் கொருவன் களத்திற்குச் செல்லத்தான் வேண்டுமென்ற

கடமை உணர்ச்சி உந்தித்தள்ளுகிறது அவளை. அந்தப்பால் மணம் மாறுப் பாலகனைப் பக்கத்தில் அழைக்கிறாள். கையிலே வேல் கொடுத்து "செருமுகம் நோக்கிச் செல்லடா" என்று வழியனுப்பி வைக்கிறாள். அத்தகையத் தாய்க் குலத்திலே - புறநானூறு புகழும் தாய்மார்களின் பரம்பரையிலே வந்த உங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது, வீட்டிற்கொரு வீரனை விடுதலைப் போராட்டத்திற்குத் தட்டாமல் தந்துதவுங்கள் என்று !

இன்னும் திராவிடத் தொழிலாளத் தோழர்களே ! உழைத்து உழைத்து உருக்குலைந்து-இரத்தத்தை வியர்வையாக்கிப் பாடுபடும் பாட்டாளி வர்க்கமே! உன்னையும் தான் திராவிடமுன்னேற்றக் கழகம் நோக்குகிறது! கேட்கிறது உடல்தேகமாக, உள்ளம் சோக, உழைத்து மாய்கிறாயே,உனக்கு இந்த நாடு தந்த பரிசு என்ன? உழைப்புக்குத் தந்த மதிப்பு என்ன? அரைவயிற்றுக்கஞ்சியும், ஆறுதலற்ற வாழ்வும்தானே ? நினைத்துப்பாருங்கள், நேர்மை நெஞ்சத்தினரே ! திராவிடத்தின் பெருங்குடி மக்களே, உங்கள் உழைப்பு உவகை தரவேண்டாமா ? உங்கள் வாழ்வு மலர வேண்டாமா ? ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களைப் பார்த்துக் கேட்கிறது, "திராவிடப் பாட்டாளி மக்களே ! ஒன்று சேருங்கள் ! செஞ்சீனத்தின் குரலுக்குப் போட்டியாக-ரஷ்ய நாட்டின் குரலுக்குப் போட்டியாக-தொனியிலே அல்ல; கொள்கையிலே-உரத்தக் குரல் எழுப்புவோம் ! வாரீர், வாரீர் !" என்று !

மாணவத் தோழர்களே ! வருங்கால வாழ்வுக் குடையோரே !

உங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் அழைக்கிறது. எப்படி ? களத்திலே குதியுங்கள் என்று ? அல்ல ! கவனியுங்கள்—ஆனால், இரண்டரக் கலந்துவிடாதீர்கள் என்றுதான் ! ஏன் ? படிக்கவேண்டிய பருவம் உங்களுடையது. பக்குவப்படவேண்டிய நேரம் !

திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டுமல்ல; மற்ற கட்சிகளை, அவற்றின் நடை முறைச் செயல்களை, அரசியல் நிகழ்ச்சிகளை நினைக்கலாம் ; கவனிக்கலாம் ; அதோடு மட்டுமல்ல – சிந்தித்தாக வேண்டும் ; அதுவும் ஏதுங்கியிருந்து சிந்திக்கவேண்டும் ! ஏனெனில் படிப்பை பாழாக்கி விடக்கூடாது ! விழலுக் கிரைத்த நீராக்கி விடக் கூடாது.

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வீரர்கள் படை மட்டும் போதாது. விவேகிகள் படையும் தேவை. நாட்டை மீட்கும் நற்பணி வீரர்படையைச் சார்ந்தது ; பெற்ற நாட்டை காக்கவேண்டியவர்களோ விவேகிகள் படையினர். திராவிடத்திலே இன்று வீரர்கள் படை அணிவகுத்து நிற்கிறது ! ஆகவே மாணவத் தோழர்களே ! எதிர்கால விவேகிகள் படையாக நீங்கள் உருவாக வேண்டும்.

காங்கிரசும்தான் விடுதலைப் போராட்டம் நடத்தியது. அதிலே வீரர்கள் படை நிறைந்திருந்தது. ஆனால் விவேகிகள் படை இல்லை. ஆகவேதான் பெற்ற சுதந்திரத்தைப் பேண முடியாமல் பரிதவிக்கிறது. ஆகவேதான் காங்கிரசில் இல்லாத ஒரு தேஷ்முக்கையும், காங்கிரசை எதிர்த்து நின்ற ஒரு ஆர். கே. சண்முகத்தையும், ஜான் மத்தாயையும், நிதிமந்திரிகளாக நிறுத்துகிறது. அத்தகைய

விவேகிகள் அற்ற வீணர் கூட்டமாக, சரிந்த கோட்டை யாக நம் இயக்கமும் ஆகலாமா ? கூடாது தோழர்களே ! கூடாது !

திராவிடம் மீண்டால்–இவர் பல கூட்டங்களில் பேசி யிருக்கிறார் அவரையே சீனுவின் தூதுவராக அனுப்பி விடலாம் என்று முடிவுகட்ட முடியுமா ? முடியவே முடியாது ; ஒரு நாட்டின் தூதுவராக வேண்டு மென்றால், அதற்குரிய தனித் தகுதியும், திறமையும் வேண்டாமா ? ஆகவே, அதற்கொரு படை தேவை ! அதுதான் விவேகிகள் படை ! அந்தப் படையாக நீங்கள் வாருங்கள் படையுடன் சேர்ந்து வளருங்கள் !

மாணவர்களைப் பொறுத்தவரை அரசியல் ஒரு பழுக்காத கனி ! பருவமடையாத மங்கை !

பழுக்காத கனி பார்க்க நன்றாக இருக்கலாம்; ஆனால் புசித்தால் ஒன்று புளிக்கும் அல்லது கசக்கும் ! பக்குவப் பட்டபின் – நன்கு பழுத்தபின் புசிப்பதே முறை– பலன் பெரும் பாதை.

அதே போலத்தான் பருவமடையாத மங்கையும் ! பார்க்கச் சுவைக்கும் புது வண்ணத்துடன் வளர்ந்திருக்க லாம் ! அவள் ; இன்னும் அத்தை மகளாகக்கூட இருக்க லாம் ! ஆனால், அத்தை மகள் என்ற உரிமையுடன் சுற்றிச் சுற்றி வரலாம் ! வட்டமிட்டுப் பேசலாம் ! ஆனால் தொட்டுவிடக் கூடாது !

மாணவர்கள் இந்த உண்மையை உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் உங்களிடம் கேடயங்களை எதிர்பார்க்கவில்லை ! கத்திகளுக்காகவும் காத்துக் கொண்

டிருக்கவில்லை! துப்பாக்கிகளையும் தூக்கித் தரவேண்டாம். ஆனல் உங்களிடம் எதிர்பார்ப்பது வருங்கால விவேகத் தையும், நாட்டைக் காக்கும் நல்லறிவாளர்களாக வளரும் பண்பையும் மட்டுமேதான்.

ஆகவேதான் மாணவத் தோழர்களே! அரசியலே கவனிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளுங்கள்— கவனிக்காமலும் இருந்துவிடாதீர்கள்— என்று திராவிட முன்னேற்றக் கழகம் உங்களைக் கோருகிறது!

இப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பெரி யோர்களிடமும், தாய்மார்களிடமும், தொழிலாளத் தோழர் களிடமும், மாணவ நண்பர்களிடமும் தனது லட்சியக் கருத்துக்களை எடுத்து வீசுகிறது!

மாதவரம் சென்னையின் விளிம்பிலே உள்ள சிற்றூர் தான்! எனினும் இங்கு இத்தகைய ஒரு மிகப் பெரிய கூட்டத்தையும், உங்களது புன்னகைத் தவழும் முகத் தையும், அதிலே ஒளியும் புதுமைப் பொலிவையும் காண நான் மகிழ்கிறேன்.

நாம் இங்கு கூடியிருக்கும் நேரம், ஏகாதிபத்ய வெறி பிடித்த காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து மும்முனைப் போராட்டங்களை நடத்தி வெற்றி வாகை சூடிநிற்கும் நேரம். எதிர்கால திராவிடத்தின் உதயத்தைக் காண உரிமை முழக்கத்தை உயர்த்தி எழுப்பும் நேரம்!

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களைப் பற்றி உங்களில் ஒருவருக்கும் தெரி யாமல் இருக்காது. அரசியல் துறையிலே, சமுதாயத் துறையிலே—பொருளாதாரத் துறையிலே நாம் நடத்தியப்

போராட்டங்களும், பெற்ற வெற்றியும்தான் இன்று நேருவைத் தென்னகத்துக்கு அடிக்கடி இழுத்துவந்து நிறுத்துகிறது.

அரசியல் துறையிலே நாம் நடத்திய போராட்டம் தான் நேருவை எதிர்த்து—அவரது நான்சென்ஸை எதிர்த்து நடத்திய உரிமைப் போராட்டம்—மானம் காக்கத் துணிந்த மகத்தான போராட்டம்.

சீரும், சிறப்பும், செங்கரும்பின் சுவையும் பெற்ற செந்தமிழுக்கு மத்தியிலே இந்தியைத் திணிக்க ஈடுபட்டது டில்லி ஏகாதிபத்தியம் முன்பு. அந்த வெறியை ஒழிக்க—தமிழின் தகுதியை நிலை நிறுத்த, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல; திராவிடக் கழகமும் இந்தி ஒழிப்புப் போராட்டம் ஒன்று நடத்தியது. புகை வண்டி நிலையங்களில் புன்னகையோடு தோன்றிக் கொண்டிருந்த ஒண்ட வந்த இந்தி எழுத்துக்கள் புதைந்து போயின—அழிக்கப் பட்டன.

அப்போது நேரு தென்னகம் வந்தார். திரண்டிருந்த எதிர்ப்புச் சக்தியைக் கண்டார்; சிந்தை தடுமாறினர். சீறிப் பாய்ந்தார்; "நான்சென்ஸ்" என்று நாப் பகன்றார்.

அந்தத் தீச்சொல் கேட்டு பொங்கி எழுந்த தமிழகத்தை அண்ணு தன் அன்பு மொழிகளால் அடக்கினர். "மறப் போம்—மன்னிப்போம்" என்று நேருவை மனிதனுக்கிக் காட்டினர். அந்தச் சம்பவம் மக்களின் மனத் திரையி லிருந்து மறையும் நேரம். திருத்தணியிலே மண் உரிமையை இழக்க மனமில்லா வீரர்கள் போர்க்கோலம் கொண்டனர். வட ஆற்காடு மாவட்ட திராவிட முன் னேற்றக் கழகச் செயலாளர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

தலைமையில் இருநூறு காளையர் போர்ப் பரணி பாடினர்கள். "திருத்தணி தமிழர் பகுதியே" என்று உரிமை முழக்கம் செய்தனர்.

அதைக் கேட்ட நேரு—அலகாபாத் பண்டிதர்—ஆசிய ஜோதி—சீறிப் பாய்ந்தார். 'நான்சென்ஸ்' என்றார். 'சிறுபிள்ளைத்தனம்' என்றார். 'முட்டாள்தனம்' என்றார்!

கேட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டுமா? இந்தக் கேள்வி பிறந்தது மானமிழக்கா மாவீரர் வழிவந்த நம் மிடையே! அதன் விளைவாகத்தான்—அதைக் கண்டிக்கு முகத்தான்—பட்டப் பகலிலே—பாராள்வோருக்கும் பகிரங்கமாக அறிவித்துவிட்டு—"நேருவின் ஆணவப் பேச்சுக்கு எங்கள் அதிருப்தி காணீர்" என்று ஓடும் ரயில்களை நிறுத்துவது என்று சிதம்பரம் மாநாட்டிலே அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

உடனே தமிழகத்திலே மீண்டுமோர் புத்துணர்ச்சி தோன்றியது! புது எழுச்சி புறப்பட்டது! ஒரே நாளில் 5000 வீரர்கள் சிறை புகுந்த புதுமைச் சம்பவமும் நடைபெற்றது.

இந்தியாவின் சரித்திரத்தில் எந்தக் கட்சியும் ஒரே நாளில் 5000 பேரை சிறைக்கனுப்பியது கிடையாது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் எழுதிக் காட்டியது அத்தகையதொரு புதுமைக் கதையை.

அன்று போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள் 5000 பேர்கள் மட்டுமல்ல; படையிலே ஒரு பகுதியைத் தான் பஜகோவிந்தப் பூமான்களின் தலைவர் ஆச்சாரியாரும், அவரது போலீஸ் புலிகளும் சிறைப் பிடித்தார்கள்.

நேருவுக்குக் காட்டவேண்டும் என்பதற்காக—அவருக்குத் தோன்றிய எதிர்ப்பை 'அழித்துவிட்டேன்' என்பதைக் காட்டிக் கொள்ளுவதற்காக. போராட்டத்திலே கலந்து கொண்ட அனைவரையும் கைது செய்வது கடினமானக் காரியமில்லை; ஆனால், சிறையிலே இடமில்லை!

திருச்சி மத்திய சிறையிலே நாங்கள் அடைக்கப் பட்ட நேரத்தில், முன்பே தண்டனை ஏற்றிருந்த அநேகர் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே விடுதலை செய்யப் பட்டனர். நாங்கள் சிறை புகுந்த நேரத்தில், அந்தக் கைதிகள் எங்களைக் கையெடுத்துக் கும்பிட்டு, "நல்லா யிருப்பீர்கள், வந்து சேர்ந்தீர்கள் எங்களை வெளியே அனுப்ப" என்று வாழ்த்தினர்கள்.

போராட்டத்திலே கலந்து கொண்ட அத்தனை பேரையும் ஆச்சாரியார் பிடித்திருப்பாரேயானால், அடைக்க இடமின்றி, சட்டசபைக் கட்டிடத்தைக் காலி செய்து, 'ஆக்டிங்' சிறைச்சாலையாக அதை மாற்றியிருக்க வேண்டும். முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்ற எண்ணிக் கையிலே போராடியவர்களில் ஐயாயிரவரை மட்டும் பொறுக்கிக் கொண்டது ஆச்சாரியார் ஆட்சிபீடம். இரண்டு மாதம், மூன்று மாதம் என்ற அளவிலே சிறைத் தண்டனையும் தந்தார். இரண்டு பயங்கரப், பழிவாங்கும் வழக்குகளையும் ஜோடித்தார். தூத்துக்குடி சதி வழக்கு—கல்லக்குடி கலவர வழக்கு இவைகளை முன்னிருந்து நமது கழகக் காளையர் பலர்—முன்னணி வீரர்கள் சிலர் முகம் காட்டாது மறைக்கப்பட்டிருக்கின்றனர் இரும்புக் கம்பிகளுக் கிடையே.

தூத்துக்குடியிலே சதி புரிந்ததாக நமது தோழர்கள் பலர் திருநெல்வேலிக்கு அருகிலே உள்ள விளாத்திக்குளம்

சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். வதைபட்டு வாடுகிறார்கள்.

நாம் இங்கே களிக்கிறோம்—கரகோஷம் செய்கிறோம்—பேசுகிறோம்..

ஆனல் இதே நேரத்தில் நம்முடன் தோளோடு தோள் நின்று பணியாற்றிய அத் தோழர்களின் நிலை என்ன? கஞ்சிக் கலையம் கையிலேந்தி காராக்கிரகத்திலே அடைக்கப்பட்டிருக்கின்றனர். பத்து மாதங்களாக வழக்கும் முடிவடையாத நிலையில் பரிதாபகரமான நிலையில் பழிவாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

பத்து மாதங்களாக தங்கள் மாணிக்கச்செல்வங்களின் மழலைச் சொற்களைக் கேட்கமுடியவில்லை; பெற்றதாய் தந்தையரைப் பார்க்கமுடியவில்லை; மனைவிமார்களையும் காணமுடியவில்லை.

இம்மாதிரியே கல்லக்குடிப் போராட்டத்திலே ஈடுபட்ட காரணத்திற்காக நண்பர்கள் கண்ணதாசன், தருமு போன்றவர்கள் ஒன்றரை ஆண்டு தண்டனை தரப்பட்டிருக்கிறார்கள். வழக்கு அப்பீல்காரணமாக இன்று வெளியே வந்திருக்கிறார்கள்.

இம்மாதிரி அடக்குமுறைகளிலே ஆதிக்க வெறியின் கோரப் பற்களிடையே சிக்கி திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுவரும் அல்லல்கள் ஏராளம்! ஏராளம்!—அமோகம்! அமோகம்! எந்தக் கட்சியும் தாங்கமுடியாத சோதனைகளை நமதியக்கம் தாங்கி வருகிறது.

நமக்கு இத்தனை பெரிய சோதனைகள் ஏன்? தண்டனைகள் ஏன்? அடக்குமுறைக் கட்டுகள் ஏன்? நேரு "நான் சென்ஸ்" என்றும் "சிறுபிள்ளைத்தனம்" என்றும் நாவடக்க மின்றிப் பேசியதை எதிர்த்தது தவறு? அவருக்கு நற்பாடம் கற்பிக்க நாம் தொடுத்த போர்முறை தவறு? செய்யக்கூடாதா?

'தவறு' என்று சொல்லுபவர்கள்- 'செய்யக்கூடாது' என்று செப்புபவர்கள் சற்று சிந்திக்க வேண்டும். நேருவைப் போன்ற பெரிய மனிதர் இப்படியெல்லாம் பேசலாமா? ஆசிய ஜோதி என்ற பட்டத்தை ஏற்றவர்-மனிதருள் மாணிக்கம் என்ற மதிபபைப் பெற்றவர்-கொரியாவுக்குப் படை அனுப்பிய சமாதானச் சிகரம் இப்படிப் பேசலாமா? பொங்கி எழுந்த பெரியதொரு சமுதாயத்தை நோக்கி ஏசலாமா? அவரது தகுதிக்கு ஏற்ற வார்த்தைகளா அவைகள்? அப்படியானால் அவருக்கும் மேடையைச் சாக்கடையென மதித்துக் கத்தும் பண்டாரத்திற்கும் என்ன வித்தியாசம்?

'முட்டாள்கள்' என்று ஒரு முட்டாள் ஏசலாம்! 'சிறுபிள்ளைத்தனம்' என்று சிறுமதிக்காரன் சீறலாம்! 'பைத்தியக்காரர்கள்' என்று ஒரு பைத்தியக்காரன் ஏசலாம்! ஆனால், நேரு சொல்லலாமா?

"பைத்தியக்காரர்கள்" என்று நேரு சொல்வதை வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும், நாளை அவர் சட்டத்தின்முன் நிற்க முடியாதே!

பைத்தியக்காரர்கள் நாம் என்றால், எட்டிநின்று கல்லைத் தூக்கிப் போடலாம்; கிட்ட நெருங்கி சட்டைகளைக் கிழித்தெறியலாம்; அதே சமயம் சட்டத்தினின்றும்

தப்பிவிட முடியும், நேருவின் வாக்குமூலமே 'பைத்தியக் காரர்கள்' என்றல்லவா கூறுகிறது? பைத்தியத்தைச் சட்டம் அண்டமுடியாதே! திருச்சியில் கட்டிய கணவனை-போலீஸ் அதிகாரியை கைத்துப்பாக்கியால் சுட்டுவீழ்த்திய பெண் ஒருவள் 'பைத்தியம் கொண்டவளா' என்ற சந்தேகத்தில்-சட்டம் அவளைப் பிடிக்கமுடியுமா? என்ற பிரச்னை உருவாகி இருப்பது நீங்கள் உணராததல்ல!

ஆகவே, நேருவின் வாய்மொழியைப் பயன்படுத்திக் கொண்டு-நாமும் பைத்தியக்காரர்களாக-சுயநினைவு இழந்தவர்களாக எதுவும் செய்யமுடியும் அண்ணு கண்ஜாடை காட்டுவரராளுல்! ஆனுல் நமது கண்ணியமும், கடமையுணர்ச்சியும், கட்டுப்பாடும் அம்மாதிரியான ஆபாச எதிர் வேலைகள் நடைபெறுமல் தடுத்துவருகின்றன, ஆகவேதான், நாட்டு மக்கள் அத்தகு நோர்மையைக் கடைப்பிடித்து வரும் காரணத்தால்தான்-பொறுமை இழக்காத காரணத்தால்தான்–அவர்கள் வந்து தவறுகள் பேசியும் தப்பிப் போகிறார்கள்.

வடக்கே யிருந்து வந்து, வகையற்ற முறையிலே பேசிப் போவோரின் பட்டியல் இன்று நீண்டுகொண்டே வருகிறது.

இப்படித்தான் பிரகாசா என்றொருவர் வந்தார். அவரை பிரகாசா என்றழைப்பதைவிட ஜனநாயகத்தின் தந்தை–இல்லை, இல்லை. ஜனநாயகத்தின் பாட்டன் என்றழைக்கலாம்! அவர் வந்தார். திராவிடத்திலே தேர்தலிலே ஈடுபட்டு முடிவைக் கண்டபின் தங்களுக்கென ஒரு நல்ல திசையை எதிர்நோக்கிக்கொண்டிந்த நேரத்திலே வந்தார், ஜனநாயகத்தைக் காப்பாற்ற. ஆனுல் அவர் செய்ததோ, காங்கிரஸ் கட்சியின் பலத்தைக் குறைத்து, ஒற்றுமையுடன் கூடி

நின்ற ஐக்கியமுன்னணியை மந்திரிசபை அமைக்க அழைத்தாரில்லை. கொல்லை வழியாக நுழைந்தோடி வந்தவரை கொலுமண்டபத்தில் அமர்த்திக் கும்மாளம் போட்டார் அந்தப் பெரிய மனிதர்!

அவர் வடக்கத்திப் பண்பிலே நேருவையும் மிஞ்சி விட்டார்! அவரது நேர்மைக்குப் புறம்பான செயல் ஒன்றைக் குறிப்பிடுகிறேன், கேளுங்கள்

தஞ்சை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் சென்றார் ஒருமுறை அவர். தஞ்சை நகருக்கு அவர் சென்றபோது வரிசை வரிசையாக எதிர் நின்று, அவரை வாழ்த்துப்பாடி. வரவேற்ற கருப்புக்கொடிகளை-திராவிடர்களின் அதிருப்தியின் எதிரொலிப்பைக் கண்டார்! கண்டதும் கலங்கினர், தனக்கென உருவாகியிருந்த அந்தப் பயங்கர எதிர்ப்பையும் ஒப்புக்கொண்டார். அதை வெளிப்படையாகவும் சொல்லத் தயங்கினரில்லை! இல்லாவிடில் தஞ்சை தந்த அந்தக் கொடி வரவேற்பு பற்றி, ''இச் சம்பவம் எனக்கு ரஷ்யப் புரட்சியை ஞாபகப்படுத்துகிறது'' என்று அவர் சொல்வானேன்?

முதல்நாள் இந்தத் தஞ்சைச்சம்பவம். மறுநாள் அவர் திருவாரூர் சென்றாராம். அன்று ஓயாத மழை. வழியெல்லாம் மழைநீர் தேங்கி நின்றுகொண்டிருந்திருக்கிறது, அந்நிலையில் பிரகாசா பவனி வந்துகொண்டிருந்தார். வழியிலே கருப்புக்கொடி வரவேற்பும் நிகழ்ந்தது. பிரகாசாவின் காரடுவிலே செல்ல இரு மருங்கிலும் அடைத்துநின்ற நம்மவர்கள் சிறு சிறு குச்சிகளிலே கருப்புத்துணிசொருகி ஆட்டிய வண்ணம் ''பிரகாசா திரும்பிப்போ!'' என்று கோஷமிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில், ஆடிக்கொண்டிருந்த ஒரு குச்சியிலி ருந்து நழுவிவிட்டது கருப்புத்துணி ஒன்று. அதுவும்கீழே விழவில்லை, பறந்துசென்று பிரகாசாவின் மேலேயே விழுந்துவிட்டது.

அவ்வளவுதான்! பிரகாசாவுக்கு கோபம் எல்லை மீறி புறப்பட்டுவிட்டது, உடனே காரை நிறுத்தச் சொன்னர். காரிலிருந்து கீழே பாய்ந்தாராம்–கொடி காட்டிக் கொண் டிருந்தவர் ஒருவரின் கையிலிருந்த கம்பைப் பிடுங்கினர்! சாலையோரத்தில் நின்று கொண்டிருந்தவர்களை-அங்கே போனவர் வந்தவர்களை அக் கம்பு கொண்டு தாக்க ஆரம் பித்து விட்டாராம்!

யார்?

தொடை தட்டி, மீசை முறுக்கி கோதாவில் இறங்கி விடும் சோதாப் பேர்வழியல்ல!

ஆனல்.....?

அகிம்சா மூர்த்தியின் வார்சிலே வந்த வடக்கத்தி சீமான்-மனித மாணிக்கம் அனுப்பி வைத்த மகானுபாவர்– கலகலத்த காங்கிரஸ் கோட்டைக்குத் தூணுக வந்த கவர்னர் பெருமான்–மேன்மை தங்கிய பிரகாசா!

அவர்தான் இந்த 'வஸ்தாது' வேலையைச் செய்தாராம்.

செய்யலாமா அவர்? மீண்டும் கேட்கிறேன் செய்ய லாமா அவர் இந்த சீர்கெட்ட செயலை? இன்னும் கேளுங் கள், கையிலே கம்பேந்திய பிரகாசா நின்று கொண்டிருந் தோரை ஓட ஓட, துரத்தித் துரத்தி அடித்திருக்கிறாராம்.

சேரும் சகதியும் நிறைந்த பாதை-எங்கும் செந்நீர் நிறைந்த சிறு சிறுத் தேக்கங்கள்-அதிலே ஓடிப் பழக்க மில்லா பிரகாசா ஓடுகிறார் என்றால் என்ன நடக்கும்? அதுவே நடந்தது. சேற்றிலே வழுக்கிய பிரகாசா கீழே விழுந்தார். வாரி அடித்த செந்நீர் அவர் உடையினைத் திலும் சிவப்புக் கரையை பூசியது. உடனே அங்கு நின்று கொண்டு அவரது அகோரத் தாண்டவத்தை ரசித்துக் கொண்டிருந்த கலெக்டர் முதலிய பெரிய மனிதர்கள் பாய்ந்தோடி பிரகாசாவைக் கட்டிப்பிடித்து, தூக்கி நிறுத் னர்களாம். மாரியம்மன் கோவிலில் சாமிவந்து கூத்தாடும் பூசாரியைப் பிடித்து நிறுத்துவதைப்போல, பின் சமாதான மும் செய்தார்களாம்.

இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் பிரகாசா நாகை சென்றிருக்கிறார். அங்கே உண்மையை உணர்ந்து, மறைக்க முடியாமல் சொல்லியிருக்கிறார். ''வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உருவாகியுள்ள இயக்கம் ஒரு சிலரையே கொண்டது என்று நான் எண்ணிக் கொண் டிருந்தேன். இப்பொழுதுதான் தெரிகிறது, அதில் பலர் நிறைந்திருக்கின்றனர்'' என்று.

தஞ்சையிலே 'ரஷ்யப் புரட்சி' என்கிறார்-திரு வாரூரிலே அடிக்கத் துணிந்தார்-நாகையிலே புத்திவந்து பேசி யிருக்கிறார். காரணம் என்ன? அந்த அளவுக்கு திராவிடர் இயக்கம் இங்கு வளர்ந்து கொண்டு வருகிறது.

அரசியல் துறையிலே நேருவையும்—அவரது '' நான் சென்ஸை''யும் எதிர்த்துபோராட்டம்நடத்தினேம். அதே சமயத்தில் ஆச்சாரியாரின் குலதர்ம கல்வித் திட்டத்தை எதிர்த்து சமுதாயத் துறையிலும், டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றப் பொருளாதாரத் துறையிலும்

போராட்டங்கள் நடத்திடுவோம். போராட்டங்களைக் கண்டு பயந்தெழுந்த ஆச்சாரியாரின் அடக்கு முறை வெறியாட்டங்களிடையே ஆறு பேரைப் பலி கொடுத்தோம். திராவிடத் தாயின் விடுதலைக்காக காணிக்கை செலுத்திடுவோம்.

ஆறு பேரை மட்டுமல்ல-அந்த நற்பணியில் ஈடுபட்ட நாள் முதல் எத்தனையோ பேரைப் பலி கொடுத்திருக்கிறோம்.

கொள்கைப் பிடிப்பின் காரணமாக, கெடுமதியாளர்களின் கொடுமையிலே சிக்கி மரத்திலே பிணமாகத் தொங்கிடுவார் உடையார் பாளையம் வேலாயுதம். நினைத்தால் நெஞ்சு குலுங்குகிறது. மனைவியார் மண்ணிலே புரண்டு ஆழ-பச்சிளம் குழந்தைகள் தொங்கும் பிணத்தைச் சுற்றிச் சுற்றி வர-உற்றார் உறவினர் ஓலமிட்டுக் கதற-மரத்திலே தொங்கினர் அந்தக் கொள்கைக் கோமான், தற்கொலையால் அல்ல-தருக்கர்களின் கொலையால்!

அடுத்தபடியாக தாலமுத்து நடராசனைப் பறித்துச் சென்றனர் பாராள்வோர், செந்தமிழின் மத்தியிலே சிந்து பாடப் புகுந்த இந்தியை எதிர்த்து-மொழிக்காகப் போராடிய காரணத்திற்காக சிறையிலே தள்ளப்பட்டனர் அவ்விருவரும். ஆனால் ஐயகோ!-நாம் மீண்டும் அவர்களைக் கண்டது, பிணங்களாக-வெறி கொண்ட ஆதிக்கத்திற்குப் பெரும் பலியாக.

அடுத்தபடியாக மாவீரன் மஜீத், கடலூர் பகுதியிலே தேர்தலில் உழைப்பாளிக் கட்சிக்கு உழைத்த காரணத்தினால், கட்டாறி தாங்கினன் மார்பிலே! செங்குருதி சிந்தி சவமானான்!

மறைக்கப்பட்ட மாவீரர்கள் பட்டியலில் அடுத்த படியாக நிற்பவன் வடசென்னைப் பாண்டியன், கடைத் தெரு சென்று களிப்போடு வீட்டுக்கு நுழைந்த அந்த கடமை வீரனின் கண்களிலே மிளகாய்ப் பொடி தூவி குத்திக் கொன்றார்கள்.

அதோடு மட்டுமல்ல, குடும்பத்தின் ஒரே வாலிபன்- பெற்றதாய் பெரிதுவக்க குடும்பத்தை நடத்தியவன்- லால்குடி நடராசனைப் பிரிந்தோம் கல்லக்குடியிலே !

மண நாள் குறித்து வைத்தாள் தாய்—ஆனால் பிண மாகத் திரும்பினான் திருமகன்—கேசவன் என்னும் வாலி பன் ! இன்னும் தூத்துக்குடியிலே நால்வரைத் துடிக்கத் துடிக்கப் பறி கொடுத்தோம் !

உயிர்களை மட்டுமல்ல நண்பர்களே, அங்கங்களையும் அறுத்துக் கொடுத்தோம், அடக்குமுறையின் அகோரப் பசிக்கு! கால்களைத் தந்தோம்; கைகளை வெட்டிக் கொடுத் தோம். இன்னுமொரு பரிதாபம் தோழர்களே, செபஸ் டியன் என்னும் வாலிபன்—தனது ஆண் குறியை இழந் தான்—வாழ்விலே அவன் அனுபவிக்க வேண்டிய பேரின்ப சுகத்தை அழித்து—அந்த பத்தொன்பது வயது பாலகனின் வாழ்வைப் பாலைவனமாக்கி விட்டது இந்த பண்பிலா ஆட்சிபீடம்.

வாடுகிறான் வாலிபன் ! மறைந்த மாவீரர்களின் குடும் பத்தினர் வசை பாடுகிறார்கள் ! ஆனால்.....இத்தகைய கோர விளையாட்டுகளை விளையாடி விட்டுத்தான்—வெறிச் செயல்களைச் செய்த பின்னும்தான் சிரிப்பு நடை போடு கிறார்கள் சீர்கெட்ட ஆட்சிபீடத்தினர்.

இத்தகைய கோரச் சம்பவங்களுக்கும் காரணமாக இருந்த அவர்கள்தான் நமது போராட்டங்களைக் குறித்து கேலி மொழிகளையும் உதிர்க்கிறார்கள். ஆனால்...இன்னும் ஒரு குரல்—காங்கிரசின் குரல் அல்ல—அதன் குரலைவிட அழுத்தமானத் தொனியிலே கண்ணியமற்ற கேலிக்குரல் ஒன்று எழும்புகிறது. அதுவும் நமக்கு அருகிலிருந்தே எழும்புகிறது.

கல்லக்குடிப் போராட்டம் முக்கியம்தானு? சாதாரண மாக ஒரு ஊரின் பெயரை மாற்ற ஒரு போராட்டம் நடத்த வேண்டுவது அவசியம்தானு?-இப்படிக் கேட்கிறார்கள் நம்மோடு நடமாடி வரும் கம்யூனிஸ்ட் தோழர்கள். நாங்களும் அதைத்தான் கேட்கிறோம். ஒரு ஊரின் பெயரை மாற்ற ஒரு போராட்டமா? "மக்களின் குரல்" மாற்று என்று சொன்னால் மாற்றிவிட வேண்டியதுதானே நாடாள்வோர் கடமை. கடமை மறந்தது காங்கிரஸ் ஆட்சி! ஆகவேதான் போராட்டம் உருவானது, 'தேவையானது தானு?' என்று கேட்பானேன்? அதை நேரு உணர வேண்டும்; லால் பகதூர் சாஸ்திரி உணரவேண்டும்.

பெங்களூருக்கருகிலே அழிக்கல் என்றிருந்த இடத்தை வாழைப்பட்டினம் என்று இரண்டே மாதங்களில் மாற்றிவிட வில்லையா? தஞ்சை மாவட்டத்திலே திருநாட்டியத்தான்குடி என்ற இடத்தை ஒரே ஒரு சர்மா முயன்ற காரணத்தினால் மாஹூர் ரோட் என்று மாற்றிவிட வில்லையா? ஆனால் பலர் ஒன்று சேர்ந்து பலமுறைச் சொல்லியிருந்தும்-பஞ்சாயத்து போர்டுகளும், நகரசபைகளும் தீர்மானங்கள் நிறைவேற்றியும் டால்மியாபுரம் பெயர் மாற்றப்பட வில்லை ஏன்? அது சாதாரணமான பெயர் மாற்றப் போராட்டம் அல்ல; வடநாட்டு ஆதிக்கம் இங்கு இருக்கக் கூடாது என்று முழங்கும் போராட்டம்.

அதை உணராமல் 'கித்தாப்பு' மொழியிலே கிண்டல் பேசுகிறார்கள்.

" திராவிடநாடு பிரிந்தால் ஏழைகளின் வாழ்வு மலருமா?" என்ற புதியபாணத்தைத் தொடுக்கத் தொடங்கி யிருக்கின்றனர் கம்யூனிஸ்ட் தோழர்கள். ஆனால் அவர் கள் உணரவேண்டும். திராவிடம் என்ற வார்த்தையிலே தான் ஏழையின் வாழ்வு இருக்கிறது. அவன் வாழ்வு மலர திட்டம் இருக்கிறது. இதை உணரவேண்டும் ஐக்கிய தமிழகம் கோரும் மாஸ்கோ பக்தர்கள்.

நீங்கள் சிந்திக்க வேண்டும் தோழர்களே, ஏழைகளின் துயரைத் தீர்ப்பதே வாழ்வில் லட்சியம் என்று சொல்லிக் கொள்ளும் கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கும் நமக்கும் அடிப் படை வேற்றுமை ஒன்றே ஒன்றுதான். அவர்கள் பசி நீங்க வழி கேட்கிறார்கள். நாம் பசியை நீக்குவதுடன் மானத்தையும் காக்க வழி தேடுகிறோம். ஆகவேதான் பசியையும் மானத்தையும் இணைத்தே நாம் பேசுகிறோம். அவர்கள் பசியை மட்டும் பேசுகிறார்கள்.

நடுத்தெருவிலே இரண்டு நண்பர்கள் நடந்து செல்லு கின்றனர். அவர்களிலே ஒருவன் கம்யூனிஸ்ட் மற்றொரு வன் திராவிட முன்னேற்றக் கழகத்தான். நடந்து செல் லும் அவர்களது செவிகளிலே திடீரென்று, "ஐயா, ஐயா! பசி பசி!" என்ற அலரல் கேட்கிறது. இருவருமே பார்க் கத்தான் செய்கிறார்கள். சாலை ஓரத்து சாக்கடை ஒன்றில் ஒரு மனிதன் கிடக்கிறான், கால்களும் கைகளும் கட்டப் பட்ட நிலையில் "ஐயா! இரண்டு நாளாக இந்த நிலையில் கிடக்கிறேனய்யா! பசி பழிவாங்கி வருதய்யா!" என்று அலறுகிறான்.

அதைக் கேட்ட நண்பர்களில் ஒருவன் ''ஐயோ! இரண்டு நாட்களாக பட்டினியா? இதோ வருகிறேன், இரு'' என்று சொல்லி கடைத்தெரு நோக்கி ஓடி அவனுக்கு ஏதாவது உணவு வாங்கி வந்து ஊட்டுவான், அந்த கட்டப்பட்டவன் சாக்கடையிலேயே கிடக்கும் நிலையில் இந்தச் செயலைச் செய்பவன்தான் கம்யூனிஸ்ட் நண்பன்.

ஆனால் மற்றொருவன், முதலில் கட்டுண்டு கிடக்கும் அந்த பசிக்காரனை, சாக்கடையிலிருந்து தூக்குவான்-கட்டுகளைக் களைந்தெறிவான்-குளிப்பாட்டுவான்-வேறு உடை உடுத்துவான்-பிறகுதான் பக்கத்திலிருக்கும் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்வான். இந்தச் செயலைச் செய்யக் கூடியவன்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தான்.

நாட்டிலே பசியும் பட்டினியும் தொலையவேண்டும் என்று முழக்கமிடுகிறது கம்யூனிசம். ஆனால் அடிமைத் தளைகளால்-சாஸ்திர சம்பிரதாயங்களால்-பழங்கால பாழ் எண்ணங்களால்-கொள்கைகளால் கட்டப்பட்டு, வடநாட்டு ஆதிக்கம்-வஞ்சக ஆரியம் என்பன போன்றவை ஒன்றுகக் கலக்கும் சாக்கடையிலே தள்ளப்பட்டுக் கிடக்கும் திராவிடத்தை மீட்டு, அந்தக் கட்டுகளைத் தகர்த்தெறிந்து-பின் பட்டினியையும், பசியையும் பறந்தோடச் செய்யும் மார்க்கத்தைத் தேடுகிறது திராவிட முன்னேற்றக்கழகம். இதிலென்ன தவறு இருக்க முடியும்?

மார்க்ஸ் என்ன சொன்னான்? லெனின் என்ன சொன்னான்? ரஷ்யா எப்படிக் கருதுகிறது? என்ற கண்ணுடனேயே எதையும் கவனிப்பது கூடாது. ஆனால் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதல்ல வாதம். ''லெனின் என்ன சொன்னான்?'' இதைத்தான் ரஷ்யாவும் எண்ணுகிறது; சென்சீனாவும் கருதுகிறது. ஆனால் மாலங்

கோவும், மாசேதுங்கும் எல்லாவிதங்களிலும் ஒற்றுமையா கத்தான் இருக்கிறார்களா? அவர்களிடையே-அவர்களின் ஆட்சி முறைகளிடையே வேறுபாடு இல்லை என்று யாரால் சொல்லமுடியும்? வேறுபாடு இல்லை என்று யார் எதிர்த்து வாதிடமுடியும்?

நிலம் செழிக்கவேண்டும்-தானியக் கதிர்கள் தழைத்து வளரவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறது கம்யூனிஸ்ட் கட்சி. ஆனால், நிலத்திலே நிறைந்திருக்கின்ற னவே புல் பூண்டுகள் அவைகளை அழிக்கவேண்டும்-அப் புறப்படுத்த வேண்டும்-ஆமாம், களை எடுக்கவேண்டும்; பிறகுதான் கழனி நோக்கவேண்டும்-என்று நாம் சொல்லு கிறோம்! அதைப்போன்றதுதான் சமுதாய சீர்திருத்தம் என் றும் விளக்குகிறோம். அந்தச் சமுதாயம் சீர்திருத்தப்பட் டாலொழிய 'சாக்கடை'யிலிருந்து அப்புறப்படுத்தப்பட் டாலொழிய எதையும் எதிர்பார்க்க முடியாதென்றும் சொல்லுகிறோம். செயலிலும் சுதித்துவிட்டோம்.

ஆனால் இந்த நேரத்திலேதான் "ஜனசக்தி" என்ற நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் கருத்துகள் அடங்கிய பத் திரிகை கேட்கிறது, நம்மைப்பார்த்து-துணிந்து-சிந்திக்கும் பண்பில்லாமல்- "வடநாட்டுக்காரன் ஓடிவிட்டால் இன் பம் வந்துவிடுமா?" என்று! இதுதான் கேள்வி தோழர் களே! கேட்கிறது ஜனசக்தி! கேட்கப்படுகிறவர்கள் நாம்!

"வடநாட்டுக்காரன் ஓடிவிட்டால் இன்பம் வந்து விடுமா?"

கேட்கிறது கம்யூனிஸ்ட் கட்சி! எந்த கம்யூனிஸ்ட் கட்சி தெரியுமா தோழர்களே, சியாங்கே ஷேக்கை

விரட்டிவிட்டு-செஞ்சீனுவிலே செங்கொடி உயர்த்தி புரட்சி மண்ணிலே பூத்த புதுமலர்த் தோட்டமாக-புதுமைப் பூங்காவாக சீனத்தை மாற்றியிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிதான் இந்தியாவின் பிரஞ்சுத் திட்டுகளிலிருந்து-புதுவையிலிருந்து, காரையிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் ஓடிவிட்டால "புதுமை மலரும்-புதுவாழ்வு தோன்றும்" என்று கூறி, புது பலத்தோடு போராடத் துணிந்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிதான் கேட்கிறது, "வடவன் ஓடினால் இன்பம் வருமா?" என்று.

நான் சொல்லுகிறேன், பதில்கூட அல்ல-பக்கத்து சீனு விரலால் சுட்டிக்காட்டுகிறேன் "செஞ்சீனத்தைப் பார்! சிந்தித்துப் பார்" என்று!

இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கும் 'ஜனசக்தி'தான் தனது தலையங்கத்தில் ஏப்ரல் 25-ம் தேதி நாடெங்கும் ஆசியதினம் கொண்டாடுங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறது, நாம் கேட்க முடியாதா இப்போது 'ஏப்ரல் 25-ம் தேதி ஆசிய தினம்' கொண்டாடினால், 26-ம் தேதி நம்மிடையே நசுங்கிவரும் பாட்டாளி வர்க்கம் பலனடைந்து விடுவார்களா? குடிசைகள் குபேர மாளிகைகளாகி விடுமா?' என்று.

அதே தலையங்கம்தான் இன்னும் சொல்லுகிறது. கொரியாவிலும், இந்தோசீனுவிலும் போர் நின்றால் புதுவாழ்வு வந்துவிடும்' என்று. நாம் கேட்க முடியாதா, "இந்தோசீனப் போராட்டத்திற்கும் இங்குள்ள நடைபாதைவாசிகளுக்கும் என்ன சம்பந்தம்? அங்கு போர் நின்றால் இங்

குள்ள பட்டினிப் போரும் வறுமைப் போரும் நின்று விடுமா?'' என்று! கேட்கலாம்–கேட்க முடியும்–ஆனால் கேட்கமாட்டோம், அரசியல் கண்ணியத்தை–நாகரீகத்தை கடைப்பிடிக்கும் ஒரே காரணத்தால்!

'டால்மியாபுரம் கல்லக்குடியாக மாறினால் பாட்டாளி மக்களுக்கு என்ன பலன்?' என்று கேட்கிறார்கள். தெரியும் எங்களுக்கு அதனால் ஏழைக்கு உடனடிப் பயன் இல்லை என்று! ஆனால் சொன்னேனமா நாங்கள் அப்படி ஏதாவதுபாலும்தேனும் பெருக்கெடுத்துஓடுமென்றுஇல்லையே! ஆகவேதான் நாங்கள் சொல்லுகிறோம், எமது லட்சிய முகடான—ஆண்டாண்டு காலப் போர் பரணியின் பயனான திராவிட நாடு கிடைத்தால், அது குடியரசு நாடாக—ஜன நாயகப் பூங்காவாக மாறும் என்று.

ஆனால் நீயோ ''உலகப் பாட்டாளி மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்று கத்துகிறாய். ''டெலஸ்கோப்'' மூலம் பார்க்கிறாய். முடியுமா? தொண்டை வரளக் கத்துகிறாயே, உன் எண்ணம் ஈடேற முடியுமா? என்றாவது ஒரு நாள் உலகப் பாட்டாளி மக்கள் அத்தனை பேரும் ஒன்று சேர முடியுமா? காரியமாற்ற முடியுமா?

எதையும் அகில உலகக் கண்ணோடு நோக்குகிறாய். ஆனால் பலன்தான் கிடைக்காது.

ஆனால் அதே சமயம் உன் கொள்கையைப் பரப்புவதோடு மட்டும் நீ நின்றுவிடுவதில்லையே, ஏன்? ஏன் மற்ற கட்சிகளின் கொள்கைகளை, இலக்கியங்களை இழித்தும் பழித்தும் வருகிறாய்?

திராவிடப் பிரிவினைக் கிளர்ச்சியை இகழ்கிறுயே. அதனுள் அடங்கியிருக்கும் உண்மைகளை நீ ஏன் அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. பூகோள புத்தகத்தை எடுத்துப்பார். ஒரே நாடாகவா உன் கண்களுக்குத் தோன்றுகிறது. எத்தனை எத்தனையோ எல்லைகள் இருக்கின்றன. ஒரே தலைவர்தானு இருக்கிறார்? இல்லையே! எத்தெத்தனையோ எல்லைக் கோடுகள்! எண்ண முடியாத வரம்புகள்! வரப்பு மிகுந்தால்தான் நாடு செழிக்கும்.

ஆகவேதான் சொல்லுகிறோம் - பலமுறை சொன்னோம் - இனியும் சொல்வோம் - உன்னுடைய "ஐக்கிய" சுலோகம் ஆதாரமற்றது - அறிவுக்குப் புறம்பானது என்று!

இதை நீ உணர மறுக்கிறுய் - உணரும் பண்பு உன்னிடம் இல்லாத காரணத்தால்!

இந்த இடத்திலே முதல் மாநில மாநாட்டிலே அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன், இந்த நாட்டின் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்! அது எதிர்ப்பை எள்ளி நகையாடி - ஏச்சுக்களை தூசாக மதித்து தாயகத்தை மீட்கும் பெரும் பணியிலே இறங்கியிருக்கிறது.

நேருப் பண்டிதரின் சமீப காலத்திய பேச்சுகள், நமது அப்பணியின் வெற்றி அருகில் நெருங்கிவிட்டது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

வெற்றி பெறுவோம் - கிளர்ச்சியின் பலனைப் பற்றிக் கவலைப்படாமல் - போரிலே பங்கேற்போம் - முன்னேறுவோம் - வெற்றிப் பாதையிலே வீர நடை போடுவோம் - பெருமதிப்பு கொள்வோம்! பூரிப்படைவோம்!

நம் மேடை

நம் மேடைகளிலே நிதி தரப்படுகிறது. நாளை ; நண்பர்களோ, நிதியை வாங்கித் தலைவரிடம் தருவோம். தந்ததை தலைவர் ; 'அண்ணை' விடம் ஒப்படைப்பார். இதை தவிர 'அந்த நிதி' எங்கள் வீட்டிற்கு நேரடியாகச் செல்லாது. நேரடியாகச் செல்லாது என்றால் மறைமுகமாகவும் செல்லாது-மந்திரிகள் வீட்டிற்குப் போவது போல! நாட்டிலே இன்று நாம் மேடை மீது நடமாட வந்து, நம் பல்லாங்குழி தொட்டிகளிலே பவனி வந்து; பட்டணங்களிலே நடை போட்டு வருவது கண்டு நச்சு நினைப்பினர், சூழ்ச்சி செய்து சுக்கு நூறுக்க, சிதைக்க அதிகார அம்புகளைத்தயாரித்து, எதிர்ப்பையும் ; ஏசலையும் வளர்த்து அவர்கள் வாழ்கின்றனர்.

சென்ற வாரம் நான் தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் ஆகியோர் குறிஞ்சிப்பாடி மேடையிலே பேச அமர்ந்ததும் வந்துகுவிந்தன கேள்வித்தாள்கள், கையிலே எழுதியவை மட்டுமல்ல, கலரிலே அச்சடிக்கப்பட்டும், தரப்பட்டது.

'துண்டு அறிக்கைகள்' தும்பிகள் போல பறக்க விடப்பட்டது; நம் மேடைக்கருகே.

தோழியர் சத்தியவாணி அம்மைக்குத் தரப்பட்ட துண்டுப் பிரசுரத்தைப் படித்தார். கேள்வி எது தெரியுமா? ''பானுமதி ; ஒரு படத்திற்குப் பத்து லட்சம் வாங்குவ தேன் ?'' 'எவ்வளவு முக்கியமான—திறமையான—அவசர மான கேள்வி !...சந்தேகத்தால் உண்மையில் சமர்ப்பிக்கப் பட்ட கேள்வியல்ல அது. கேள்வித் துண்டுகளைக்காட்டி; நம்மைக் கலங்கச் செய்துவிடலாம் ; நம் மேடைப் பேச் சுக்குத் தடைபோடலாம் என்ற மடமைக் காரணம்தான்; இந்தப் பீடைக் கேள்விகளைக் கூடை கூடையாகக் கொட்டுகிறார்கள், எங்களின் மேடைப் பேச்சிலே எங்க ளுக்கு நம்பிக்கை கிடையாது, மக்களை மயக்கும் மகுடி மயக்க மருந்து எங்களிடத்திலே இல்லை. ஆனால் ; எங்கள் கொள்கையிலே உண்மை ; உறுதி. நீதி, நேர்மை, நடனம் புரிவதால்தான் நாங்கள் கேள்வி கண்டு கலங்கவோ ; 'மேடைக்கடையை' மூடிக்கொள்வதோ கிடையாது.

நம் மேடைக்கு, நாங்கள் பேசப்புறப்படும் முன்னே; தாயாரிடம் வாய்க்கரிசி வாங்கிக்கொண்டு ; அன்பு மனை யாளை ஒருமுறை ஆசை தீரப் பார்த்து ; குழந்தையை வாரி ஒரு முத்தமிட்டு ; ''கடைசி முத்தம் கண்ணே ! இது. காலை நான் வீடு வந்தால் ; புது முத்தம் பெறு !.....

மனையாளே ! நான் பேச்சு மேடைக்குப் போகவில்லை. இன்று சுடுகாடு போகிறேன். திரும்பி வந்தால், பார்த்துக் கொள் !'' என்று கூறித்தான், நாங்கள் இன்று மேடைக்கு வரவேண்டி யிருக்கிறது. காரணம் ; இன்று அந்த அள வுக்கு நாட்டிலே ; மேடைகளைச் சுற்றிப் பொருமை

வாடை வீசுகிற்து. காட்டு மிராண்டித் தனமான பலாத் காரமான ; அராஜக; அக்ரம நிலைமை அதிகரித்து வருகிறது,

'சுதந்திரச் சூரியன்' தோன்றி நான்காண்டுகளிலே இந்த நல்லவர்கள் ஆட்சியிலே 1932 முறை அக்ரமத் துப் பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. 82 பேர்; சுட்டுக் கொல்லப்பட்டனர்; *10,000* பேர் சிறையில்!

எங்கே. நடந்தது இந்த வெங்கொடுமை விளையாட்டு? ஜப்பானிலா ? ஜெர்மனியிலா ? இத்தாலியிலா? ரஷ்யாவிலா? இல்லை ; இந்தப் 'புண்ய பூமி'யில் தான் !

82 பேர் ; யார் ? முற்றுகை யிட்டவரா திடீரென்று, அகிம்சைக்கு எதிராக? சண்டமாருதமாகக் கிளம்பி ; இந்தியாவிலே ; சமரசப் போருக்கெதிராக, சங்குமுழக்கியவரா... இல்லை இந்தியப் பிரஜை தான். ''வந்தே மாதரம் !'' என்று, மேடையிலே பாடியவர்கள்தான்.

சிறைச் சாலையிலே சேலத்திலே சுட்டார்கள். நம் மேடைகளுக்குத் தடை போட்டார்கள்; கையிலே கத்தி யெடுத்தல்ல—ஒரு கொடி எடுத்து-அதிலே கொம்பு கூடக் கிடையாது ; கையிலே கொடி பிடித்து கொள்கை காக்க. குமுறும் உள்ளத்தை எடுத்துக் கூற வந்தவர்களின் மீது குதிரை விட்டு மிதித்தனர். லத்தியாலே, குத்தினர். இரத்த ஆறு காட்டினர். அதிகாரத் தேர் பவனி வருகிறது காங் கிரஸ், அகிம்சை வீதிகளிலே !

இந்த பவனிதான் காந்தியார் கண்ட கனவா? இது தான்; இராம இராஜ்ய பவனியா? இதைக் கூறித்தான், ஓட்டு கேட்டனரா மேடைகளிலே!

நம் மேடைகளிலிருந்து : "தங்கத்தாள் போன்று நெல் விளைந்த திருநெல்வேலியிலே, கத்தாழை தின்று, ஆறுபேர் இறந்தனராம். காரணம் ; கத்தாழையிலே கடும் விஷமிருந்ததால். ஏன் இந்த நிலை ? எதற்கு இவ்வறுமை ? பிள்ளையோ ! பிள்ளை வியாபாரம் ! நாலணாவுக்கு ஒரு குழந்தை? நீடிக்க வேண்டியது தானே? நாடாளப் போன நல்ல மனிதர்களே!" என்று நாம் கேட்டால்; கதறினால், கண்ணீர் உகுத்தால் அடிவயிற்றிலிருந்து அலறிக் கூவினால் சாமர்த்தியமாக சமரசமாக நிதானமாக நா. நோகாதக் குரலிலே "நான்கு ஆண்டு குழந்தை இந்தியா, அது எதைச் செய்ய முடியும் ? சிறுபிள்ளை. இத்தகைய பொறுப்பை எப்படி நிறைவேற்றும், உடனே எல்லாம் ஜீரணமாகுமா குழந்தைக்கு ! என்று பேசி பதில் தருகிறார்கள்,

பசி பட்டினியைப் போக்கும் வழி 'பஞ்சத்தைப் போக்கும் பால்' 'அந்தக் குழந்தைக்கு ஜீரணமாகவில் லையே என்றால் அதிகார அடக்குமுறை பிரியாணி மட்டும் அந்தக் குழந்தைக்கு எப்படி ஜீரணமாகிறது? நாடு முழு மையும் நம் மேடைக்கு, எழுத்துக்கு, எண்ணத்துக்குத் தடைபோடும், கடினக் கரித்துண்டுகள் கலந்த மகாடு மைப் பிரியாணி மட்டும் ஜீரணமாகிறதா ? நன்மை என்ற தும் செறிக்க மறுக்கிறதா நான்காண்டு இந்திய குழந் தைக்கு ?

காமராஜர் ஈரோட்டிலே, மேடையிலே பேசிக்கொண் டிருந்த போது ஒரு பையன் வந்து துண்டு கடிதம் தந்தான், அதிலே "ஐயா ! ரேஷன் தொல்லை தாள முடிய வில்லை. தாங்கள் கொஞ்சம் கவனம் கொள்ளுங்கள் " என்று எழுதப்பட்டிருந்தது. படித்த காமராஜர். அந்தப் பையனையும் கடிதத்தையும் மாறிமாறிப் பார்த்தார் கேள்வி

கேட்டவன் செஞ்சட்டையோ, கருஞ்சட்டையோ அணிந்திருக்கவில்லை. வெறுஞ்சட்டை கந்தலாடை தான் கட்டியிருந்தான்.

காமராஜர் கையிலே இருந்த கடிதம் இதற்குள்ளே நினைந்து விட்டது. காபி சிந்தி விட்டதால்! கண்ணீரா வடிப்பார் காமராசர்?

உடனே மேடையிலே பதில் சொன்னர்; "இதென்ன பெரிய பிரச்சினை? கல்கத்தாவிலே மெயில் கவிழ்ந்ததால் பலர் இறந்தனரே! அதைவிடவா, இது முக்கியமான பிரச்சினை?" என்று அந்தப் பையனைப் பார்த்து பேசி யிருக்கிறார். எட்டு பேர் இறந்தது கேட்டு, நாமும் அனுதாபப் பட்டோம். மனித இருதயம் நமக்கும் இருப்பதால்,.

செத்தவனைப்பற்றிக் கவலைப்படுகிறீரே காமராஜரே! சாவதா? வாழ்வதா" என்ற கேள்வி முனையிலே நிற்கும் ஏழைக்கு—இந்நாட்டுக்கு எங்கே வழி? என்று மேடை யில் நாம் வேதனைக்குரல் எழுப்பினால், அவர்கள் விளையாடு கிறார்கள், பரிதாப நிலையைக் கூறும்போது பரிகாசத்தை நமக்குப் பரிசாகத் தருகின்றனர். மானம் பறி போவதைப் பற்றி நாம் மேடைமீது மார் வலியப் பேசினால் அவர்கள் மரணம் எய்தியவனைப்பற்றி, மணிக் கணக்கிலே 'முழங்கு' கிறார்கள்,

திருவாங்கூரில் ஒரு கம்யூனிஸ்டு தோழனை, கொள்கை யால் வேறொருவன் என்ற காரணத்துக்காக, சவுக்காலே அடித்தனர், அவன் சோர்ந்து விழுமளவுக்கு. தாகம் தாளாது அவன் தண்ணீர் கேட்டான் சாடை காட்டி. "தண்ணீரா வேண்டும்? இதோ; இரு" என்று சொல்லி

மூத்திரத்தைக் கொண்டுவந்து தந்தனர். "அம்மா! நான் தண்ணீர் கேட்டால், நீ சுண்டக் காய்ச்சிய பாலில் கற் கண்டு இட்டுக்கொண்டு வருவாயே! இங்கே பார்! மூத் திரம்!" என்று, அவன் சொல்லவில்லை, மனக் கண் முன்னே நினைத்துப் பேசினன். ஆயாசத்தால் அவனை அறி யாமல் அவன் வாய் 'அம்மா' என்றது. அருகிலிருந்த அதிகாரிகள் 'அம்மா வேண்டுமா?' என்று சொல்லி அவன் சொல்லாத முன்னே சென்று அவனின் தாயை அழைத்து வந்தனர். தாயாரை நிர்வானமாக்கி; மகனுக்கு முன்னே நிறுத்தி. மகனையும் (அவனையும்) நிர்வானமாக்கி. இருவரை யும் ஒன்றுக இணைத்தனர், பலாத்காரமாக!...நம் மேடை களிலே நாம் கட்டிய கதை அல்ல இது. காங்கிரஸ் ஆட்சி யிலே நடந்தது. திருவாங்கூரிலே!

காங்கிரஸ் கரைந்து, கட்டெறும்பான நிலைமைக்குக் காங்கிரஸ் பக்தர்களை விட கண்ணீர் வடிப்பது நாங்கள் தான். மாடமாளிகை போன்ற காங்கிரஸ், மண் மேடான நிலைமைக்கு நாம் மனம் வருந்துகின்றோமென்றால், கார ணம், தமிழன் திருப்பூர் குமரன் தடியடிபட்டு-சிதம்பரம், செக்கிழுத்து, மூத்திரக்களஞ்சியத்திலே கஞ்சி வாங்கிக் குடித்து, எங்களைப்போலப் பேசிப் பேசி, காந்தியார் துடித்து வளர்க்கப்பட்டது காங்கிரஸ். தூக்கு மேடை யிலே பகவத்சிங் துவண்ட பிறகுதான், எத்தனையோ பேரை இழந்த பிறகுதான் வளர்ந்தது காங்கிரஸ் என்பதை நாங்கள் உணர்பவர்கள். தமிழர்கள்—தென்னுட்டவரின் உழைப்பால் தழைத்ததுதான் காங்கிரஸ். இதைத் தெரிந்தே நாங்கள் 'காங்கிரஸ் அழியட்டும்' என்கிறோம் மேடை மீதிருந்து.

மேனுட்டிலே ஒரு முறை உண்டு. வீட்டிலே கட்டி வளர்த்த நாய்க்கு வியாதி வந்ததும் வீட்டுக்காரன் டாக்

டரைக் கூப்பிடுவான். டாக்டர். "வியாதி இனி தீராது" என்று தெரிவித்ததும், நாய்க்குச் சொந்தக்காரன் நாயை உடனே சுட்டுக் கொன்றுவிடுவான். கட்டியல்லவா, ரொட்டி போட்டு. வளர்த்தோம்? பால் ஊட்டிடேமே, படுக்கை தந்தோமே, பக்கத்திலே வருமே, நாவனைத்து நன்றி காட்டுமே, நாம் வளர்த்த நாயை நாமே கொல்வதா? என்று எண்ணுமல், கட்டாயம் அவன் சுட்டுக் கொல்வான். ஏன்? சிரித்தே வளர்ந்த நாய்—நோயால் சிதைக்கப்படுவதைவிட, துடித்துத் துடித்து துவளுவதை விட—மரண மூச்சு விடமுடியாமல், அழுவதைவிட அதைக்கண்டு, தான் திகைப்பதைவிட, அழித்துவிடுவது 'அரிய செயல்' என்று அங்கே கொள்ளப்படுகிறது. அதை (**Crueal Kindness**) இதயமேற்ற அன்புக் கொடுமை என்பர். இதே முறையினைத்தான் நாங்கள் 'காங்கிரஸ்' விஷயத்தில் காட்ட விரும்புகிறோம். நேரு வெளியேறி ராஜாஜி வெறுத்து, சலசலப்பு—சஞ்சலம் வலுத்து, கழுதை கெட்டுச் சுவர் ஓரத்திலே ஒட்டி நிற்பதுபோல, நல்லவர் களெல்லாம் கைவிட்டு, இன்று நாடோடிகளெல்லாம் காங்கிரசை ஆதரிக்கும் அளவுக்கு, 'நோய் கொண்ட நாயாக் காங்கிரஸ் இருப்பதைவிட அது அழிவது, நல்லதல்லவா?

கல்லூரி கட்டிடத்தைக் கொத்தன் கட்டினான். அதற் காக அவனையா பிரின்ஸ்பாலாக்குவது? அல்லது ஆசிரியனு கவா அமர்த்துவது? கொத்தன் பள்ளிக்கூடம் கட்டின மைக்கு பாராட்டுரை தரலாம், பணம் கூட வேண்டு மானால் போட்டுத் தரலாம். கட்டின காரணத்துக்காக கொத்தனையே வாத்தியாராக அமர்த்தினால், பையன்களுக்கு கொத்த வேலை செய்யத் தெரியுமே தவிர, புத்தகத்தைப் படிக்கவா முடியும்? அதேபோல சுதந்திரம் வாங்கிக்

கொடுத்தமைக்காக இவர்களேதான் ஆளவேண்டும். என்று கூற என்ன நியாயமிருக்கிறது? 'இன்று மேடைகளிலிருந்து காங்கிரசைக் குறை கூறுகிறார்களே? இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? 'சுதந்திரப் போரிலே' ஒதுங்கி நின்றவர்கள் இவர்கள்' என்று இன்று நாம் தூற்றப்படுகிறோம்.

பலமுறை எழுதியெழுதி நாம் ஓய்ந்திருக்கிறோம், இந்தப் பிரச்னைப் பற்றி. சுதந்திரம் நாங்கள்தான் வாங்கினோமென்றால், அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன் கைராட்டினத்தைக் கண்டும், அரையணு தக்களியினைக் கண்டும், சத்தியக் கொடி கண்டும் வெள்ளையன் வெளியேறிவிடவில்லை, பட்டாளத்தைப் பார்த்துத்தான், நாங்கள் "சேருங்கள்! படையில்" என்று சொன்னோம், திராவிடத்திலிருந்து எத்தனையோ தோழர்கள் சேர்ந்தனர். இப்படிப் படை பெருகக் கண்ட பிறகுதான் வெள்ளையன் தொடை நடுங்கினான். எங்களின் உழைப்பு வாடை வீசிக்கொண்டுதான் இருந்தது, அந்த நேரத்திலும் என்பதை இவர்களால் மேடை மீதிருந்து மறுக்க முடியுமா இல்லையென்று?

குறிஞ்சிப்பாடியில் ஒரு கூட்டத்தில் பேச போய்க் கொண்டிருந்தேன், நல்ல மழை, நாங்கள் காரில் போய்க் கொண்டிருந்தோம், எங்களுக்கு முன்னே ஒரு தோழர் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று அந்தத் தோழர் எங்கள் காரை நிறுத்தினர், வந்தார்.

"ஐயா! என்னுடைய சைகிலுக்கு விளக்கில்லை. தயவு செய்துக் காரை எனக்குப் பின்புறமாக மெதுவாக ஓட்டி வாருங்கள்" என்றார். நான் சொன்னேன், "நான் இப்போது அவசரமாகப் போகவேண்டியுள்ளதப்பா, பொதுக்

கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டியுள்ளது'' என்றேன். ''நானும் அங்கேதான் போகிறேன்'' என்றார் அத்தோழர். பிறகு, முன்னே மோட்டார் சைக்கிள் செல்ல, பின்னே நாங்கள் வெளிச்சம் காட்ட, அவர் போய் கொண்டிருந்தார். இதற்குள்ளே சைகிலிலே உள்ள 'டை' கழன்று சாமான்களெல்லாம் கீழே விழ ஆரம்பித்தது. அதை அவர் அறியாமலே போய்க் கொண்டிருந்தார். நாங்கள் இறங்கி அவைகளைப் பொறுக்கியெடுத்து, எங்கள் காரிலே வைத்துக்கொண்டு, பின்னர் ஊர் போனதும் தந்தோம்.

அதுபோல, விடுதலைப் போர் நோக்கி ஓடிக்கொண்டிருந்த காங்கிரஸ் மோட்டார் சைகிலுக்கு, நாங்கள் விளக்குக் காட்டித்தான் வந்தோம். உதாரணமாக, ஆகஸ்ட் 15-ஐ அண்ணு கொண்டாட வேண்டுமென்று சொன்னபோது, அவரின் கீழேதான் நாங்கள் அடங்கிக் கிடந்தோம். இத்தகைய கருத்துகளை எங்கள் மேடை மீதிருந்து எடுத்தெடுத்துச் சொல்லி விட்டோம். நாங்கள் மேடையிலே நிற்கிறோம். இல்லை-குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறோம். பேச்சாளர்களாகிய நாங்கள் குற்றவாளிகள். எங்களது பேச்சு, பேச்சல்ல-வாக்குமூலம். எங்கள் மேடைக்கருகிலிருந்து கேட்பவர்கள் மக்களல்ல, நீதிபதிகள், நீதிபதிகளாக நினைத்துத்தான் நாங்கள் பேசுகிறோம்.

"கைத்தறி வாங்கலியோ"

ஜனவரித் திங்கள் நாலாம் நாள் தமிழகத்தின் வீதி களிலே இந்தக் குரல் உரக்க ஒலித்தது. வேதனைக் குரலை மாற்றுவதற்காக வியாபாரக் குரல் ஒலித்தது. ஒலித்தவர்கள் வழக்கமான வியாபாரிகள் அல்ல. ஒரு பெரிய கட்சியின் தலைவர்கள், பிரச்சாரர்கள், தொண்டர்கள், செயல் வீரர்கள், பெரிய நகரங்களிலே, பட்டி தொட்டிகளிலே 'கைத்தறி வாங்கலியோ' என்று கூவிக்கொண்டு சென்றார்கள். குறைந்த விலை, சிறந்த துணி, சாயம்போகாது சதசமானது என்றெல்லாம் வியாபார பாஷைகள் தெரியாதவர்கள். 'சொந்தமிருந்த சோதரிகாள் அன்புத் தோழர்களே' என்ற உடுமலைக் கவிஞரின் பாடல்களின் பாடல்களைப் பாடிக் கொண்டே ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு ஒவ்வொரு ஊரிலும் வியாபாரம் செய்திருக்கிறார்கள். பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் திருச்சி மாநகரத்திலும் முன்னணி வீரர்கள் வேறு பல ஊர்களிலும் ஆடைகளை ஆயிரக் கணக்கில் விற்றது மட்டுமல்ல; லக்ஷக்கணக்கான மக்களிடத்திலே, கைத்தறியாளரின் நிலைகுறித்தும், அவர்கள் கஷ்டம் தொலைக்க கைத்தறிகளையே உடுத்த வேண்டு

மென்றும் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே அம்மையப்பன் என்ற ஒரு சிற்றூர், ஆர்வமிகுந்த இயக்கத் தோழர்கள் உலவும் இடம். அந்த மிகச் சிறிய ஊரிலே இருநூறு ரூபாய்க்கு மேல் கைத்தறி துணிகளை விற்பனை செய்திருக்கிறார்கள் என்றால் ஜனவரி நாலு எத்தகைய பெரும் பிரச்சார தினமாக அமைந்திருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ!

தஞ்சை பொதுக்குழுவிலே இந்தப் புதிய திட்டம் தீர்மானமாகியது. ஒருநாள்—கைத்தறியாளர் தினம் கொண்டாடுவதால் அவர்களது கண்ணீர் அன்றைக்கே துடைக்கப்பட்டுவிடும் என்பதல்ல நமது நம்பிக்கை. இந்த அடையாள வியாபாரத்தால் கைத்தறிகளை உடுத்த வேண்டும் என்ற எண்ணமும் ஆர்வமும் மக்களிடையே தோன்றும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு உண்டு.

நாலாந்தேதி கையிலே நாலணு உள்ளவர்கள் எல்லாம் கூட ஒரு சிறு கைக்குட்டையாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று துடித்தார்கள். கையில் காலணு உள்ளவர்கள் "கைத்தறியாளர் கஷ்டம் போக்க இதோ என் பங்கு" என்று வியாபாரம் செய்ய வந்தவர்களிடம் அன்புடன் அளித்தார்கள். இந்த ஆர்வத்தின் விளைவு என்ன ஆகும்!

காலணுவுள்ளவன், மறுநாள் நாலணு கிடைத்ததும் கைத்தறி கைக்குட்டை வாங்குவான். இன்று நம்மிடம் கைக்குட்டை வாங்கியவன் நாளையதினம் ஒரு துண்டு வாங்குவான். இன்று துண்டு வாங்கிய தோழன் நாளை வேட்டி வாங்குவான், இன்று வேட்டி வாங்கியவன் வீட்

டுக்குச் சென்றதும், பார்த்தாயா கைத்தறி வேட்டியை! எவ்வளவு மென்மையாக இருக்கிறது! என்று பரவசமடை வான். என் கன்னத்தைவிடவா இது மென்மையானது! என்று காதலி கேட்பாள். ஊடல் மூளும், ஊடலைத் தீர்க்க எந்த மருந்தும் சரிப்பட்டு வராததுகண்டு, மறுநாள் காலையில் மணவாளன், ஒரு அழகான கைத்தறி சேலையைக் கொண்டுவந்து மனைவியிடம் காட்டுவான்.

இப்படி வேட்டி வாங்கியவர்கள் சேலை வாங்கு வார்கள், பின்னர் குடும்பம் குடும்பமாக கைத்தறி ஆடை களையே அணிவது என்று சபதம் எடுப்பார்கள். அந்த நல்ல எண்ணத்திற்கு வழிகாட்டுவதுதான் ஜனவரி நாலாம் நாள்.

கைத்தறி ஜவுளிக்கடையிலே ஒருநாள். ஆயிரம் ரூபாய் ஜவுளி விற்பனையாகுல் மறுநாள், நெசவாளி வீட்டிலே தேங்கிக் கிடக்கும் ஆயிரம் ரூபாய் ஜவுளி கடைக்குப் போய்த்தீரும். தேங்கிக்கிடந்த துணி வெளியேறினால், வீட்டிலே தூங்கிக் கிடக்கும் தறிகள் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

இந்த விளைவுக்கு மத்ய சர்க்கார் மனமிரங்கவில்லை, சென்னை சர்க்காரும் நீலிக் கண்ணீர் வடிப்பதோடு அனு தாபத்தை நிறுத்திவிட்டார்கள்

இனி நெசவாளியின் வாழ்வை நிமிர்த்த வேண்டிய பெரும் பொறுப்பு–பொதுமக்கள் கையிலேதானிருக்கிறது, அதுவும் உடனடியாக செய்ய வேண்டிய வேலை.

போராட்டத்திலே ஈடுபட வேண்டாம். நெசவாளி களுக்கான சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர வேண் டாம். அவர்களின் வாழ்வைப் புதுப்பிக்க கைத்தறி ஆடைகளையே உடுத்துவது என்று கங்கணம் கட்டிக் கொண்டால் போதுமானது. கைத்தறியாளரின் பரிதாபத் தைப் போக்க இதுதான் தலை சிறந்த மருந்து.

ஆலைகள் வேண்டாமென்று கூறுபவர்களல்ல நாம். விஞ்ஞான வளர்ச்சியை வெறுத்து மனிதனை முழு நேர யந்திரமாக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுமல்ல. உலகம் உள்ளவரையில் கைத்தறியும் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுமல்ல, மயில் கொண்டு வரப் போகிறோம் வழியிலே ஒரு கிளியை பூனை பிடித்துக் கொல்லப்போகிறது. கிளியைக் காப்பாற்ற முனைகிறோம். கிளியைக் காப்பாற்றுவதால் மயில் வேண்டாமென்று அர்த்தமில்லை, ஆலைகள் வேண்டுமென்கிறோம். கைத்தறிக் கிளியை வடநாட்டுப் பூனைகள் வாட்டுவதைத் தடுக்க முயல்கிறோம், நாம் தேவையென்கிற ஆலை மயில்களும் வட நாட்டுப் பூனைகளுக்கு அடிமைகளாயிருக்கின்றன. ஆகவே அந்த மயில் வேண்டாம், வேறு திராவிடத்தில் சதிராடக்கூடிய நல்ல மயில்கள் வேண்டும்; அது போலக் கிடைக்கும் வரையில் இந்தக் கிளியையாவது காப்பாற்று வோம் என்று எண்ணுகிறோம். விரும்பிய மயிலே கிடைத்து விட்டது என்றாலும் கிளியைக் கொன்றுவிட முடியுமா என்ன அவைகள் வாழவும் வேறுவழி வகுத்துத் தானே ஆகவேண்டும். அந்த வழி காணத் தவற மாட்டோம்.

இந்த உறுதியுடனே தான்—நேர்மையான தெளிவு மிக்க எண்ணத்துடனேதான் கைத்தறியாளர் துயர் துடைக்க புறப்பட்டோம் வியாபாரிகளாக!

அரசியலிலே வியாபாரிகள் பலர் உண்டு. மக்களின் ஆர்வத்தை, தொண்டர்களின் தூய்மையை மாற்றுனிடம் விலை பேசி லக்ஷாதிபதிகளாகும் வியாபாரிகள். அந்த வியாபாரிகள் எல்லாம் இப்போது வீழ்ச்சிப் படலத்திலே 'இறுதிப் போராட்ட' முரசு கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிடரின் நன்மைக்காக—இன உரிமைக்காக—மொழிப் பாதுகாப்புக்காக—யார் எத்தகைய நற்பணிகளிலே ஈடுபட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம் வலியவந்து, தனித்து நின்றோ—அல்லது அழைத்தால் சேர்ந்து நின்றோ—தன் கடமையைச் செய்திருக்கிறது. அதுபோன்ற மனத் தெளிவு மற்ற கட்சியினரிடத்திலே இல்லையென்ற வருத்தம் தி. மு. கழகத்திற்கு இருப்பினும், அதற்காக எடுத்த காரியத்தை விடுத்து வீண் பேச்சுகளிலோ, எழுத்துக்களிலோ, பொறிபறக்கும் தலையங்கங்களிலோ காலத்தை செலவிட்டுக் கொண்டிருப்பதில்லை. அரசியல் சவடாக்கள்—ஸ்டண்டுகள் அதிக நாள் பயன்தர முடியாது என்பதை போலிக் கும்பல்களுக்கு தி. மு. கழகம் பலமுறை எச்சரித்திருக்கிறது. அந்த நல்ல பாடத்தை—நாக்கில் நரம்பின்றிபேசுபவர்கள் நன்கு உணர வேண்டும்,

பேச்சு மட்டும் போதாது; செயல்! செயல்! செயல்! என முழங்கி நாளுக்கொரு திட்டம் வகுத்தால் மட்டும் போதாது. நடைமுறையில் காட்டவேண்டும் என்ற அறி

வுரையை, ஜனவரி நாலிலும் தி. மு. க. எடுத்துச் சொல்லி இருக்கிறது.

தி. மு. க. செய்த இந்த திருப்பணியை திராவிடர் நினைவில் நிறுத்துவதோடு, கைத்தறியாளர் வீடுகளிலே பிணங்கள் விழுவதைத் தடுக்க அவர்கள் பிச்சைக்காரர்களாய் மாறுவதை நிறுத்த—உடனே புறப்பட வேண்டும் கைத்தறி ஜவுளிக்கடைகளுக்கு; கைத்தறி ஆடை வாங்க!

செந்தமிழ் நாட்டு கைத்தறி சேலை வேட்டிகள் வாங்குவீர்!

திராவிட நாட்டினர் க்ஷேமம் ஓங்க சிங்கார ஆடைகள் வாங்குவீர்.

இலட்சிய இதழ்கள்

வானத்திலே நிலவு பவனி நடத்துகிறது. திராவிடத் திலே முன்னேற்றக் கழகம் பணி புரிகிறது. அழகு தெளிக்கும் நிலவைச் சூழ்ந்து விண்மீன்கள் ஒளி இறைக் கின்றன. அறிவு தெளிக்கும் கழகத்தைச் சூழ்ந்து மாணவ மணிகள் செயல் இறைக்கின்றனர். நாட்டின் நரம்புகள்– இன்று ஏட்டிலே கண் செலுத்துபவர்கள்' என்ற உண் மையை நல்லறிவாளர்கள் நவிலக் கேட்டோம். நாடு சுற்றியோர்-ஏடு படித்தோர்-பாடு பட்டோர்–இத்தனை பேரும் கேடு களைய தேர்ந்தெடுத்தப்படை, மாணவப் படை. மாணவப் படையின் மாண்புகள் குறித்து-பல்வேறு நாட்டின் சரித்திரங்கள்.....படிப்போரையும் துடித்திடச் செய்யும் வகையில் தீட்டப்பட்டுளன.

மாணவப்பருவமிருக்கிறதே—மாணவ நிலையல்ல — பருவத்தைக் குறிப்பிடுகிறேன்—முறுக்கேறிய பருவம்— மூட்டவரும் களை யையும் மோதிக்கொல்லுகின்ற பருவம்—துணிவுமிக்க பருவம்—தொண்டுபுரியும் உள்ளங் கொண்ட தூய்மைப் பருவம்—இலட்சியப் பாதையிலே இடர் கண்டு சிரித்து—துன்பம் தொடர் கதையானால்

அதையும் ரசித்து—எடுத்த காரியத்தை எப்படியும் நிறை வேற்ற ஆர்வ அலைகளால் மோதுண்டு வேங்கைப்புலியென சீறிச் செயலாற்றும் பருவம்—இத்தகைய ஈடு இணையற்ற இளமைப் பருவம்—இலட்சியத்துக்காக மட்டுமே தியாகம் செய்யப்பட்ட நாடுகள் பலப்பல.

இன்ப விளையாட்டு—ரசமான கேளிக்கை—ரதிதேவி களின் மந்தகாசமடி—இப்படி வாலிபத்தை வாரிச் செல விடுகின்றவர்களும் உண்டு. இவர்களுக்கு நடுவேதான் நாட்டுக்காக வாழ்வை ஈந்துவிட்ட நல்லவர்களும் நடமாடு கிறார்கள். வீடு துறந்து—நாடு சென்று கமண்டலமேந்தி களாகத் திரியவேண்டுமென்பதல்ல; உல்லாச மொழிந்த ஓய்வு நேரத்திலாவது உலகத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கும் உயர்ந்த பண்பு வளர வேண்டுமென்பதே நமது ஆசை.

போக போக்கியங்கள் மறைந்துவிடும். தியாகத் தழும்புகள் அழியாத—அழிக்க முடியாத முத்திரைகள். அந்த முத்திரைகளை அதிகமாகப் பெற்றவர்கள் இளைஞர்கள் தான்!

முதிர்ந்தோர் பலமுறை உதாரணத்துக்காக காட்டி னாலுங்கூட அவர்களும் இளமையின் பழக்கப்பட்ட வர்கள்—அல்லது இளமைப் பருவத்திலேயே தங்களை தயாராக்கிக்கொண்டவர்கள் என்ற அளவிலேதானிருப் பார்கள்.

மாணவர்கள் மாவீரர்கள் என்பது முகஸ்துதியல்ல. தட்டிக்கொடுத்து ஆள் சேர்க்கும் தந்திரமுமல்ல.

சீனுவிலே கொதித்தெழுந்த மாணவர்கள் திராவிடத்து மாணவர்களால் மறக்கப்பட்டவர்களல்ல. மாணவர்களின் உணர்ச்சி, மண்டலங்களை ஆட்டக்கூடியது என்பது கண்டுதான் மாசேதுங், மாணவர் கழகங்களை சைனு வெங்கும் பரப்பினன் என்பதும் திராவிடத்து இளைஞர் ஏறுகள் படிக்காமல் விட்டதல்ல.

சீனுவின் நாலாபக்கங்களிலும் சிதறிக்கிடந்த 'சின்மின் ஸுயி' சங்கங்கள் மாணவப் பாசறைகள் என்பதையும்—அந்தப் பாசறையிலே இலட்சிய வாதிகளாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் ஆரம்பத்திலே எழுபது அங்கத்தினர்கள்தான் என்பதையும்—அந்த ஆரம்ப உறுப்பினர்கள் பலர் 1927 எதிர்ப்புரட்சியிலே உயிர் நீத்தார்கள் என்பதையும்—சீனப் புரட்சி வெற்றிமலரிலே இடம் பெற்ற இலட்சிய இதழ்களாக அந்த மாணவர்கள் ஆனர்கள் என்பதையும்—திராவிட மாணவர்கள் சிந்திக்காமலிருந்ததில்லை.

உலக முணர்ந்த உத்தமர்களுக்குத்தான் சொல்லுகிறேன்—சரிதம்படித்த இளம் இதயங்களைத்தான் அழைக்கிறேன்—திராவிடம் இன்றுள்ள திக்கற்ற நிலையில்-தேம்பும் கோலத்தில்—திண்டாட விடாது தித்திப்பான வாழ்வளிக்கத் திரண்டு வருக எனத்திண்டோள் படைத் தோரை வரவேற்கும் நேரத்தில்தான் குறிப்பிடுகிறேன்..... சீனு சிவப்பாவதற்கு முன்—சியாங்கே ஷேக்கின் செங்கோல் சீறும் பாம்பென இருந்த காலத்தில்-கோமிண்டாங்கும்-கம்யூனிஸ்டும் மோதிக்கொண்டன, பெரிய உள்நாட்டுப் போர்!

சீனுவின் விலாவிலே ஜப்பானியனின் தாக்குதல். வெளியே அயலவன் படை. உள்ளே உள் நாட்டுப் படைகளின் கைகலப்பு இந்த நெருக்கடியான சமயத்தில் ஒரு சோகச் சித்திரம்.

தியாகத்தீயில் குதிக்க ஓடிவரும் திராவிட மாணவர்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய நிகழ்ச்சி.

கோமிண்டாங் படைகளின் எதிர்ப்பு பயங்கரமாகி விட்டது. கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பைத் துளைத்து வெளி யேற வேண்டிய சூழ்நிலை. எதிரிப்படைகளின் வியூகத்தை ஊடுருவி வெளியே புறப்பட்டுவிட்டார்கள், புறப்பட்ட வர்கள் நீண்டதொரு பயணம் நடத்தினர்கள். சுமார் என் ணூயிரம்மைல் நீளமுள்ளபயணம்இரண்டுஆண்டுகள் நடந் திருக்கிறார்கள். ஆண்கள்—பெண்கள் வயோதிகர்கள்— குழந்தைகள். கொள்கைக்காக லட்சியத்துக்காக கொடு மைகள் பலவற்றை குளிர்ந்தகண்களுடன் ஏற்றுக்கொண் டார்கள். அந்த வழிநடைப் பயணத்தில் கர்ப்பவதிகள் பலர்! சுமார் எட்டுக்குழந்தைகள் பிறந்திருக்கின்றன. கொடுமை பின்தொடரச் செல்கிறவர்களுக்கு குழந்தை வளர்க்க நேரமேது? வசதியேது? வாய்ப்பேச்சு ஏது? குழந் தைகளை வழியில் கண்ட விவசாயிகளிடம் ஒப்புவித்து விட்டுப் போனார்களாம்!

அப்படி ஒப்புவிக்கப்பட்டு மீண்டும் அந்தத் தாயாரால் பார்க்கப்படாத நிலையடைந்த குழந்தைகளில் ஒன்று இன் றைய சீனுவின் தலைவன் மாசேதுங்கின் பெண்குழந்தையு மொன்றும். மாசேதுங் அன்று, ஒரு சிப்பாய்போல. இன்று சீனுவின் குரலே அவன்!

இந்த நிலை அவனுக்கு தியாகம் தந்த பரிசு. பரிசை நோக்கி அவன் தியாகக்கப்பலைச் செலுத்தவில்லை. பொதுப் பணி யென்னும் கடலிலே புதுக் கொள்கையென்னும் படகேறிச் சென்றான். துள்ளிடும் கெண்டையென—பரிசு, அவன் படகில் பாய்ந்தது, விழுந்தது.

சீனு சீரழிந்துகிடந்தது. மாணவர்களின்—மாசேதுங் அதைச் செப்பனிட்டார். திராவிடம் தேய்ந்து கிடக்கிறது. மாணவர்கள் மாசேதுங்குகளாக மாறவேண்டும்.

வரப்போகும் திராவிடத்திருநாட்டின் மந்திரிகள் இன்றைய மாணவர்கள். பதவிகாட்டி அழைக்கவில்லை; குன்றத்தூர்—சென்னைக் கொடுமைகள் ஏற்படும்—அதைத் தாங்கும் இதயமுடன் வாரீர்! திராவிட முன்னேற்றக்கழக வெற்றி விழா மலரில் இலட்சிய இதழ்களாக விளங்க வாரீர்! வீணர்கள் விலகட்டும், விபீடணர் ஒதுங்கட்டும் வெற்றிப்புலிகளே! வெண்கலக் குரலுடையோரே! எழுத்தின் வேந்தர்களே! நீங்கள்தான் வேதனைதீர்க்கும் இன்பக் குரல்கள்!.....நலிவு நீக்கும் இனிய நாதங்கள்! வருக நீங்கள் வாழ்ந்துகெட்ட சமுதாயத்தை வகைப்படுத்த!...

வெற்றி நமதே!

'முரசொலி' துப்பாக்கி

(30-7-54 முரசொலி இதழில் மு. க. அறிக்கை விட்டதால் இந்த விளக்கம் எழுதவேண்டிய அவசியமேற்பட்டது.)

கலைஞர் கருணாநிதியுடைய கையிலே இருக்கும் ஒரு ஆயுதம்! அறிக்கை விடுவது; மற்றொரு ஆயுதம் மறந்து விடுவது.

தோழர் கருணாநிதி அவர்கள் சென்ற வார 'முரசொலி'யிலே ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அறிக்கையைக் காட்டி அச்சப்படுத்துவதும், அதன் மூலம் 'அவர்களை' ஆடவைப்பதும் ஓர் கலையாக கொண்டிருக்கிறார். அவருக்கு அறிக்கைவிட ஓர் பத்திரிகை இருக்கிறது. சுற்றிலும் பார்டர் கட்டி சுந்தர நடையிலே அறிக்கை விட்டிருக்கிறார். நம்மிடத்து பத்திரிக்கை கிடையாது, அறிக்கைக்கு மறுப்புவிட! இயக்கப் பத்திரிகைகளிலே கழக முக்கியஸ்தர்களைபற்றி அறிக்கைகளையோ. செய்திகளையோ பிரசுரிக்க மாட்டார்கள். காரணம்? அவர்கள் கழகத்தின் மாபெரும் தூண்கள்!

நம்மிடத்து பத்திரிகை பலமில்லை. நமக்கு இருப்பதெல்லாம் புத்தக வெளியிடுதான், நம் குறைகளை அதிலேதான் வெளியிட முடியும். கலைஞர் தன் பயங்கர குரலொடு அச்சப்படுத்துகிறார். மற்றும் வாழமுடியாதவர்கள் என்றும் கருதியிருக்கிறார். வேங்கை வெள்ளாடு மீது பாய்வதுபோல தன்னை வேங்கையாக நினைத்து 'பத்திரிகை கூண்டிலே' இருந்து கொண்டு வெள்ளாடு நிலையிலே இருக்கும் நம்மீது பாய்கிறார். முழக்கமிடுகிறார். சீறுகிறார். முரசொலியை துப்பாக்கியென்றும் கருதுகிறார், இதோ அந்த சீற்றத்தின் சொற் சிதறல்கள் :

'மலைக்கள்ளன்' திரைக்கதை வசன புத்தகம் வெளியிட நான் யாருக்கும் உரிமை கொடுக்க வில்லை என்பதையும் சென்னை கே. ஆர். நாராயணன் என்ற நபருக்கு நான் "முல்லைக் கொல்லை" என்ற புத்தகத்தை 16 பக்கங்கள் மட்டுமே வெளியிட்டுக்கொள்ள உரிமை அளித்திருக்கிறேன் என்பதையும் அதற்குமேல் அவர் அதிக பக்கங்கள் வெளியிட்டால் அதிலுள்ள கருத்துக்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் பொது மக்கட்கு அறிவிக்கிறேன்,

கருணாநிதி

இந்த அறிக்கையிலே மக்களுக்கு ஏதோ தன்னால்தான் நன்மையை நாணயத்தோடு செய்ய முடியும் என்று கருதி கலைஞர் கருணாநிதி அவர்கள் தன் முரசொலியிலே 30-7-54ம் தேதி இதழிலே அழகான மெல்லிய கோடிட்டு 'மலைக் கள்ளன்' என்ற தலைப்பிலே வெளியிட்டிருக்கிறார். நாணயத்தையும் நம்பிக்கையையும் தன்னிடத்தே கொண்டுள்ள

தாக கருதும் கருணாநிதி அவர்கள்தான் தன் கைப்பட கீழ்க் கண்ட உரிமையையும் எமக்களித்திருக்கின்றார். இதோ அந்த உண்மையான உரிமை கடிதம்

மு. கருணாநிதியின் உரிமைக் கடிதம்

K. R. நாராயணன் வெளியிட்டுக் கொள்வதற்கு, என் அனுமதி பெற்றுள்ள "முல்லைக் கொல்லை" என்ற புத்தகத்தை ஒரு பதிப்பு வெளியிட்டுக் கொள்ள உரிமை அளித்திருக்கிறேன்.

(கையொப்பம்) கருணாநிதி
19-7-54

தோழர்களே முன் பக்கத்திலே போடப்பட்ட அறிக்கையையும், மேல்கண்ட அறிக்கையையும் பார்த்தீர்களா? முன்னுக்குப்பின் முரணாக நடந்திருக்கிறார். அறிக்கையிலே 16 பக்கங்கள் என்று எண்ணிக்கையை தந்திருக்கிறார். அளித்த உண்மைக் கடிதத்திலே **புத்தகம்** என்று தெளிவாக எழுதியிருக்கிறார். இதுதான் நேர்மையா? மக்களுக்கு நம்பிக்கையோடும். நேர்மையோடும் நடப்பதாக எண்ணும் கலைஞர் கருத்திலே மாற்றத்தோடு, சிந்தனையிலேயிருந்து தவறி பேரு சென்ற வழியிலே அறிக்கை விட்டிருக்கிறார். இது எல்லோர் இதயத்தை மட்டுமல்ல, திராவிட இயக்கத்தின் மதிப்பையே குறைத்து விடுவதாகும்.

கருத்துக்களை கணக்கிட்டு சொல்கிறார். 16 பக்கங்கள் மட்டுமே தன் கருத்தென்றும் மிகுதியுள்ள பக்கங்கள் தன் கருத்துகளை கொண்டதல்ல என்றும் கூறியிருக்கிறார். தோழர்களே 'முல்லைக் கொல்லை'யை முதல் பக்கத்

திலிருந்து (அதாவது உரிமைக் கடிதம் உள்ள பக்கத் தோடு) படிக்கிறீர்கள். அதோடு இந்த அறிக்கையையும் படிக்கிறீர்கள். நீங்கள் படித்த பதிறுறு பக்க கருத்துக் களிலும் அதற்கு மேற்கொண்டுள்ள பக்கத்திலும் கருணாநிதியின் கருத்துக்கள் கொண்டவைகளதானே? பதில் கூறுங்கள்.

பதிறுறு பக்கத்து 'மேட்டர்' போதாது என்று கூறிய தும் கருணாநிதி அவர்கள் சாதாரணமாக பதில் கூறவில்லை. இன்றைக்கு நாளைக்கு என்று நந்தனருக்கு வேதியர் அளித்த உரிமையைப்போல இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்லி வழி அனுப்பிக்கொண்டே இருந்தார். பல மாதங் களுக்குப்பின் சென்ற 25-4-54ம் தேதி அன்று காலையிலே தான் தீர்ப்பை கூறினர்....."நான் இன்று மாதவரத்திலே பேசப்போகிறேன். அந்த சொற்பொழிவை சொர்ண வேலுவை வைத்து சுருக்கெழுத்து எடுக்கச் சொல்லி போட்டுக்கொள்" என்றார். அவர் சொன்னபடியே மாதவரத்து சொற்பொழிவை "முல்லைக் கொல்லை'க்கு பின் சேர்த்திருக்கிறேன்.

தோழர் சொர்ணவேலு முரசொலி காரியாலயத்திலே பணியாற்றுகிறவர். அவர்தான் மாதவரத்து சொற் பொழிவை தன் கைபடஎழுதி **அத்தை மகள்** என்ற தலைப் பிட்டு 49 பக்கம் கொண்ட கையெழுத்துப் பிரதியை தோழர்கருணாநிதியிடம் காட்ட, கருணாநிதி அவர்கள் தன் கைபட ஒவ்வொரு பக்கங்களிலும் திருத்தியிருக்கிறார். மற்றும் 'முல்லைக் கொல்லை'யை தோழர் என். வி. நட ராசன் அவர்கள் தன் பத்திரிகையான 'திராவிடனில்' பிர சுரித்து இருந்தார். அவரிடம் கேட்ட போது தோழர்

நடராசன் அவர்கள் கீழ்க்கண்ட கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.....

உரிமைக் கடிதம் 1

52ம் ஆண்டு 'திராவிடனி'ல் வெளிவந்த கருணாநிதியின் பம்பாய் சொற்பொழிவான 'முல்லைக் கொல்லை'யை தோழர் கே. ஆர். நாராயணன் அவர்களுக்கு புத்தகமாக வெளியிட்டுக்கொள்ள அனுமதி அளிக்கிறேன்.

கையொப்பம்—என். வி. நடராஜன்

இந்தக் கடிதத்தை கருணாநிதி அவர்களிடம் காட்டியதும் அவர் அந்தக் கடிதத்தின் கீழே **'அங்கீகரிக்கப்பட்டது'** எம். கருணாநிதி என்று கையெழுத்திட்டிருக்கிறார்.

உரிமைக் கடிதம் 2.

பம்பாய் பேச்சைக் கே. ஆர். நாராயணனுக்கு புத்தகமாக வெளியிட்டுக் கொள்ள உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு
நெடுமாறன்,
முரசொலி

உரிமைக் கடிதம் 3.

மாதவரத்தில் ஆற்றிய பேச்சை பம்பாய் பேச்சுடன் சேர்த்து வெளியிட்டுக் கொள்ள கே. ஆர். நாராயணனுக்கு உரிமை யளிக்கிறேரும். புத்தகத்தின் தலைப்பு 'முல்லைக் கொல்லை.'

இப்படிக்கு
நெடுமாறன்.
முரசொலி.

உரிமைக் கடிதம் 4,

மு. கருணாநிதியின் உரிமைக் கடிதம்.

K. R. நாராயணன் வெளியிட்டுக் கொள்வதற்கு என் அனுமதி பெற்றுள்ள "முல்லைக் கொல்லை" என்ற புத்தகத்தை ஒரு பதிப்பு வெளியிட்டுக் கொள்ள உரிமை அளித்திருக்கிறேன்.

கையொப்பம்

மு. க ரு ணா நி தி.

19—7—54.

அத்தனை கடிதங்களையும் படித்தீர்கள். இந்தக் கடிதங்களின் உரிமைக் கரங்களிலிருந்து அவர் தப்பவே முடியாது. பம்பாய் பேச்சையும், மாதவரத்துப் பேச்சையும் அச்சு உருவத்தில் புத்தகமாக 48 பக்கங்கள் வரும் என்று அறிந்தும் ஏனோ தெரியவில்லை 16 பக்கங்கள் என்று அறிக்கையிலே கூறியிருக்கிறார். சமீபத்தில் பத்திரிகைகளில் 'மலைக் கள்ளன்'—திரைக் கதை வசனப் புத்தகம் கீழ்க் கண்ட இடத்தில் கிடைக்கும் என்று என் முகவரியை கொடுத்திருந்தேன். அந்த முகவரியால் மலைக் கள்ளன் வசனத்தை நான் வெளியிடுகிறேன் என்று அவசரப்பட்டு தீர்மானித்து பொறுமையின் உணர்ச்சியால் தூண்டப்பட்டு அறிக்கையை விட்டுவிட்டார். "அவசரக்காரனுக்கு....." என்று கூறுவார்கள், அதைப் போல முன்னுல் நடந்த சம்பவங்களையும். உறுதிப்பாடுகளையும் மறந்து அறிக்கை விட்டிருக்கிறார். இது கட்சியிலே உள்ளவர்கள் செய்ய

வேண்டியதல்ல! எதிர்க் கட்சிக்காரனை எதிர்த்து பேசுகின்ற கருணாநிதி அவர் வாழ்க்கையிலேயே நடந்த சம்பவத்தை மறந்திருக்கிறார். கருணாநிதியின் கருத்துக்களை அளிக்கவில்லை என்று கூறுகிறார். இதோ அவர் கூறிய கருத்துக்களின் குறிப்புரைகள்.....

முல்லைக் கொல்லை : டிசம்பர் 52ல் திராவிடன் பத்திரிகையில் வெளி வந்தது.

அத்தை மகள் : 25—4—54ம் தேதி மாதவரத்தில் ஆற்றிய சொற்பொழிவு கருணாநிதியால் திருத்தப்பட்டது.

நம் மேடை : 'தளபதி' பத்திரிகையில் 4-11-51 இதழிலும் 18-11-54 இதழிலும் தொடர்ந்து வெளிவந்தது.

இலட்சிய இதழ் : 26-11-50 திராவிட நாடு இதழில் வெளி வந்தது.

கைத்தறி துணி வாங்கலியோ : 53ம் ஆண்டு திராவிடன் பொங்கல் மலரில் மலரில் வெளி வந்தது.

மேற்கண்ட கட்டுரைகளின் உரிமையை யாரிடம் முழு உரிமையை வாங்கவேண்டுமோ அவர்களிடமெல்லாம் வாங்கியாகிவிட்டது. இத்தனை காரணங்களை உங்களுக்கு விளக்கிச் சொல்லக் காரணம் தோழர் கருணாநிதி அவர்களின் அறிக்கையின் விளைவுதான்!

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி ஏற்படக்கூடாது என்ற காரணத்துக்காகத்தான் இந்த நீண்ட அறிக்கையை எழுத நேரிட்டது. படிக்கும் தோழர்களின் பார்வையை வேறு பக்கம் திருப்பிவிட்ட கருணாநிதியின் அறிக்கைக்கு பதில் விடுத்து, உங்கள் கருத்தை நீதியுள்ள பக்கம் திருப்பத்தான் இந்த அறிக்கை உருவாகியிருக்கிறது. இப்படி நான் விட்ட பதில் அறிக்கையிலே தவறு இருப்பின் உங்கள் மன்னிப்பை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன்.

அன்பன்

கே. ஆர். நாராயணன்.
30—7—54.

23-4-54.

அன்புடையீர்,

தோழர் நாராயணனுக்கு திரு மு. க. அவர்களின் பம்பாய் பேச்சை புத்தகமாக வெளியிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
For Murasoil
நெடுமாறன்

3-5-54

அன்புடையீர்,

முன்பு உரிமையளிக்கப்பட்ட மு. க.வின் பம்பாய் பேச்சோடு மாதவரத்தில் தி மு.க. அவர்கள் பேசியதையும் சேர்த்து ஒரு புத் தகமாக வெளியிட உரிமையளிக்கப்பட் டிருக்கிறது என்பதையும் புத்தகத்தின் தலைப்பு "முல்லைக் கொல்லை" என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேம்.

இங்ஙனம்
For Murasoli
நெடுமாறன்

22-4-54

திராவிடன் 12-12-52 இதழில், வெளிவந்த "முத்துக் கடலே" என்ற தலைப்புள்ள சொற் பொழிவைமட்டும் தோழர் கே. ஆர். நாராயணன் அவர்கள் புத்தகமாக அச்சிட யான் உத்தரவு கொடுத்துள்ளேன்.

N. V. நடராசன்

அங்கீகரிக்கப்பட்டது

மு, கருணாநிதி

விலை ரூ. 1

சிறந்த புத்தகங்கள்

முல்லைக் கொல்லை — 1-0-0

(மு. கருணாநிதி)

ராஜபார்ட் ரங்கதுரை

பாகவதர் — 0-8-0

(C. N. அண்ணாதுரை)

திருவரங்கம்
புத்தக விற்பனையாளர்

கிடைக்குமிடம்:

திராவிடம் கம்பெனி

132, பிராட்வே சென்னை.